# உதயன்

விலை ரூபா 6-00

கூடர்:14வள்ளுவர் ஆண்டு 2030 ஐப்பசி 24 புதன்கிழமை (10-11-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 299


# 4 நகரங்களை புலிகளிடம் இழந்ததை ஜனாதிபதி சந்திரிகா ஒப்புக்கொண்டார்

## வன்னி நிலைமையை விளக்கி விசேட அறிக்கை

கொழும்பு, நவ. 10

வன்னியில்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அண்மையில் இடம் பெற்ற சண்டைகளில் ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, மாங்குளம், கனகராயன் குளம் ஆகிய நகரங்கள் உட்பட சில பகுதிகளின் கட்டுப்பாட்டைப் படையினர் இழந்துள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வன்னி நிலைவரம் தொடர்பாக நேற்று முன்தினம் இரவு ஜனாதிபதி விடுத்த விசேட அறிக்கை ஒன்றிலேயே இதனை அவர் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

கடந்த 2 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை இடம் பெற்ற இந்தச் சண்டையில் நூற்றியொரு படையினர் கொல்லப்பட்டனர். இழப்புக் குறித்து முன்னர் எதிர்பார்க்கப்பட்ட எண்ணிக்கையை விட இது குறைவானதாகும்.

743 படையினர் காயமடைந்துள்ளனர். அவர்களில் 500 பேர் விரைவில் பணிக்குத் திரும்புவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கையில் 122 படையினர் காணாமற்போய் உள்ளனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# கஜபாபுர, பள்ளமடு மீதும் புலிகள் கடும் ஷெல் வீச்சு!

## படையினரும் பதில் தாக்குதல்

கொழும்பு. நவம்பர் 10.

வன்னியில் முல்லைத்தீவு மாவட்டம் கஜபாபுரவிலும் மன்னார் மாவட்டம் பள்ளமடுவிலும் அமைந்துள்ள படையினரின் முன்னரங்க நிலைகள் மீது புலிகள் கடும் ஷெல் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளனர்.

அத்தாக்குதல்களை முறியடிக்கப் படையினர் பதில் தாக்குதல்களை நடத்திவருவதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

நேற்றுக் காலையும் மாலையும் பாதுகாப்புத் தலைமையகம் இரண்டு அறிக்கைகளை வெளியிட்டது. அவற்றின் பிரகாரம்—

முல்லைத்தீவு மாவட்டத்தில் கஜபாபுர முன்னரங்க நிலைகள் மீதும், பெரியமடுப் பகுதி மீதும் விடுதலைப் புலிகள் தொடர்ந்து மோட்டார்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நகரில் நேற்று உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், நவ. 10

நாவாந்துறை மண்பிட்டி வீடமைப்புத் திட்டத்தில் பாதிக்கப்பட்ட 50 மீனவர் குடும்பங்கள் மேற்படி வீடமைப்புத் திட்ட ஒழுங்கீனங்களைக் கண்டித்து நேற்று தந்தை செல்வாசமாதி முன்பாக அடையாளஉண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

காலை 7 மணி தொடக்கம் மாலைவரை கொளுத்தும் வெயிலில் இந்த உண்ணாவிரதம் இடம்பெற்றது.

(ஐ-5)

## மணலாறில் இடம்பெயர்ந்த 4 ஆயிரம் பேருக்கு நிவாரணம்

### ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, நவ. 10

மணலாறுப் பகுதியில்இடம் பெறும் சண்டை காரணமாக இடம்பெயர்ந்துள்ள 4 ஆயிரம் பொதுமக்களுக்கு சகல வசதிகளையும் வழங்குமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தர விட்டுள்ளார்.

ஜானகபுர, ஒதிய மலை, மதியாமடு, மணலாறு ஆகிய பகுதிகளில் இருந்து 7 ஆயிரம் பொதுமக்கள் இடம்பெயர்ந்து அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் மற்றும் பொது மண்டபங்களில் தங்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

அதேநேரம்—

கஜபாபுர, வெலி ஓயா ஆகிய இடங்களில் இருந்து

[10 ஆம் பக்கம் பார்க்க]

## தொண்டாவின் அஸ்தி கரைப்பு

கொழும்பு, நவ 10

அண்மையில் காலமான அமைச்சர் எஸ். தொண்டமானின் அஸ்தி இன்று பிற்பகல் ஒரு மணிக்குசிவனொளி பாதமலையில் களனிகங்கை ஊற்றெடுக்கும் இடத்தில் கலக்கப்பட உள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு வெடிப்பு

கொழும்பு, நவ. 10

குருநாகல் ரயில் நிலையத்தின் பிரதான ரயில் பாதையில் நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னி நிலைமை விவரம் தருமாறு தளபதியிடம் ஐ. தே. க. கோரிக்கை

கொழும்பு, நவ. 10

வன்னியின் தற்போதைய நிலைவரம் தொடர்பாக தமக்கு விவரங்களைத் தெரிவிக்குமாறு எதிர்க்கட்சியைச் சேர்ந்த எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரியவைக் கடிதம் மூலம் கேட்டுள்ளனர்.

வன்னியில் நடக்கும் யுத்தத்தில் பாதிக்கப்படும் படையினர் தொடர்பான விவரங்களை அவர்களது உறவினர்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## தேர்தலுக்கு 35 கோடி ரூபா செலவு

கொழும்பு, நவ. 10

அடுத்தமாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ளஜனாதிபதித் தேர்தலுக்கு 35 கோடி ரூபா செலவு ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் செலவை ஈடுசெய்ய குறை நிரப்பு மதிப்பீட்டுப் பிரேரணை ஒன்றை பிரதமர் சார்பாக கல்வி உயர் கல்வி அமைச்சர் ரிச்சார்ட் பத்திரான இன்று நாடாளுமன்றத்தில் சமர்பிக்கவிருக்கின்றார்.

இந்தப் பிரேரணை மீதான விவாதம் இன்றுஇடம்பெறும்.

### இன்றைய அரசு பதவியேற்ற சமயம்

# தாண்டிக்குளத்தில் தரித்த படையினர் இன்று ஓமந்தையில் நிற்கும் நிலை

## ரணில் கூறுகிறார்

கொழும்பு, நவ. 10

''இன்றைய அரசு ஐந்து வருடங்களுக்கு முன்னர் பதவியேற்றபோது தாண்டிக்குளத்தில் தரித்து நின்ற படையினர் அந்த இடத்தில் இருந்து ஆறு மைல் தூரத்தில் உள்ள ஓமந்தையில் நிற்கும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது''.

ஐ. தே. க தலைவர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ கோத்தாவில் நேற்று இடம்பெற்ற மகளிர் அமைப்புக்களின் மாநாட்டில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

அரசின் ஆட்சிக்காலத்தில் 15 ஆயிரம் படையினர் உயி [illegible] பெரும் எண்ணிக்கையான உயிர்களை இழந்து கைப்பற்றியதோ ஆறுமைல் தூரப்பிர

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க எம்.பிக்கள் இருவருக்கு அமைச்சர் பதவிகள்

ஐ.தே.கவில் இருந்து விலகி அரசுடன் இணைந்துள்ள ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களில் கலாநிதி சரத் அமுனுகம, நந்தா மத்தியூ ஆகியோர் விசேட விவகாரங்களுக்கான அமைச்சர்களாக ஜனாதிபதி முன்னிலையில் நேற்றுப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

இவர்கள் இருவருக்கும் என்னென்ன அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்படும் என்ற விவரம் நேற்று வெளியிடப்படவில்லை.

(ஐ-க-3)

### நிதி உதவி வழங்காததை ஆட்சேபித்து

# யாழ். மாநகர உறுப்பினர்கள் கொழும்பில் உண்ணாவிரதம்

கொழும்பு, நவ. 10

யாழ். மாநகர சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குரிய நிதியுதவிகள் வழங்கப்படுவதில்லை என்ற கோரிக்கை உட்பட ஏழு அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து யாழ். மாநகரசபையின் பிரதி மேயர் உள்ளிட்ட மாநகரசபை உறுப்பினர்கள் நான்கு பேர் நாளை வியாழக்கிழமை கொழும்பில் உண்ணாவிர

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாகசபைத் திட்டத்தை எதிர்த்து வழக்கு

## கூட்டணி தாக்கல்செய்யும்

கொழும்பு, நவ. 10

வடக்கு — கிழக்கில் உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபைத் திட்டத்துக்கு எதிராக வழக்கு ஒன்றைத் தமிழர் விடுதலைக் கூட்டணி தாக்கல் செய்யவிருக்கின்றது. சட்டப்படி இத்தகையசபை ஒன்றை அமைக்க முடியாது என்றும் —

தற்போதுள்ள சூழ்நிலை

(10 ஆம் பக்கம் பார்க்க)


இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ பரிபாலன சபை

யாழ்ப்பாணம்

## சைவசமய தீட்சை

காலம்: 12 - 11 - 99 வெள்ளிக்கிழமை
மு. ப. 9-00 மணி

இடம்: நாவலர் ஆச்சிரம மண்டபம்
(நீராவியடி)

7 வயதுக்கு மேற்பட்ட இருபாலாருக்கும்

**சிவஸ்ரீ கை. திருஞானசம்பந்தக்குருக்கள்**

சைவசமய தீட்சை அளிப்பார்கள்

சைவ பரிபாலன சபை

(70837)

---

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள் உரித்தாகுக!

## ராகுல சூரியன்ஸ்

தொலைத் தொடர்பு சேவை
பிரதான வீதி, பருத்தித்துறை.

இரவு – பகல் சேவை

உள்ளூர் இல. 070 212580
சர்வதேச இல. 0094 70 212580

(70841)

---

## ஸ்கந்தவரோதயக் கல்லூரி

கந்தரோடை, சுன்னாகம்

**தரம் - 6 - அனுமதி 2000 ஆண்டு**

10 – 11 - 99 முதல் கல்லூரி அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று 30 – 11 - 99 ற்கு முன்விண்ணப்பிக்கவும்.

(70835) – அதிபர்

---

## அறவழி வாழ்த்துகின்றது

அறவழிப் போராட்டக் குழுவின் இயக்குநர் சபை உறுப்பினரும் மனித நேயமிக்க சமூக சேவையாளருமாகிய

**டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம்**

அவர்கள்

**அகில இலங்கை சமாதான நீதிவானாக**

நியமிக்கப்பட்டமை குறித்து அறவழி சமூகம் பெருமைப்படுவதுடன் அவரது சேவைகள் மேன்மேலும் வளர வேண்டுமென வாழ்த்துகின்றது.

**NVDAG** அறவழிப் போராட்டக் குழு.

(70842)

---

அச்செழு

## வளர்மதி சனசமூக நிலையம்

## சீட்டிழுப்பு முடிவுகள்

அச்செழு வளர்மதி சனசமூக நிலையத்தினால் 07—11—1999 தீபாவளித் தினத்தன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டிழுப்பின் விவரம்:—

1 ஆம் பரிசு - 4202 2 ஆம் பரிசு – 4790
3 ஆம் பரிசு - 3375

ஆறுதல் பரிசுகள்;
5009, 4920, 3952, 4626, 3997

மேற்படி பரிசுகளுக்குரியவர்கள் சீட்டுகளைச் சமர்ப்பித்து 15– 11– 99 இற்கு முன்னர் எமது நிலையத்தில் பரிசினைப் பெற்றுக்கொள்ளவும்.

★ மேற்படி சீட்டிழுப்புக்கு ஆதரவு நல்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

— நிர்வாகிகள்

வளர்மதி சனசமூக நிலையம்,
அச்செழு.
(70833)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது காரியாலயத்தில் நீண்டகாலமாக தமது சீரிய சேவையை நல்கியவரும் சக அலுவலருமான

**அமரர் ச. ஜெகநாதன்**

அவர்களின் மறைவு கேட்டுப் பெரும் அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

– கணக்கீட்டு காரியாலய அலுவலர்கள்,
தபாற் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

(70832)

---

**ஆண்டிறுதிப் பரீட்சை**

[3 ஆம் தவணை]

தரம் 1 – 5 வரை
10 – 11 – 99 இன்று
பிற்பகல் 2. 30 மணிக்கு
ஆரம்பமாகும்.

தரம் 6 – 11 வரை
சனிக்கிழமை நடைபெறும்,

**Bond** யாழ் நகர்

[70852]

---

சித்த வைத்திய
சத்திர
சிகிச்சைமாணி

## புதிய அனுமதிகள் 1998/99

மேற்படி கற்கைநெறிக்கு விண்ணப்பித்த தகுதியுள்ள விண்ணப்பதாரிகள் அனைவருக்கும் நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் கடிதங்கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. நேர்முகத் தேர்வு 15–11–1999,16–11–1999 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

01. பிறப்புச் சான்றிதழ்
02. க. பொ. த உயர்தர பெறுபேற்றுச் சான்றிதழ்
03. க. பொ. த உயர்தர மொத்தப் புள்ளிகள்
04. பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றுள்ளமையை நிரூபிக்கும் ஆவணம்
05. பாடசாலை விடுகைப் பத்திரம்

இவற்றின் மூலப் பிரதிகளுடனும் (Original) தேசிய அடையாள அட்டையுடனும் நேர்முகப்பரீட்சைக்கு சம்பந்தப்பட்டோர் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்

(சி/9770)

---

**விபேட்டி** அச்சுவேலி.

இன்று மட்டும்
சத்தியராஜ், கௌதமி
நடித்த

**✻ எயர்போட்**

காட்சிகள்: 10-30, 2–30
T.P.No.070-212223
070 = 212678
(70831)

---

## ராஜா

யாழ்ப்பாணம்
ரஜனி - ரோஜா
மற்றும் பலர் நடித்த

**✻ உழைப்பாளி**

10-30, 2–30,
(சி/9680)

---

## நாகம்ஸ்

சுன்னாகம்
விஜய் – சாளினி
நடித்த

**✻ காதலுக்கு மரியாதை**

காட்சிகள்:
[illegible]
(70814)

---

# மரண அறிவித்தல்கள்

## இராமலிங்கம் இராஜகுலசிங்கம்

சாவகச்சேரி "சக்தி" தபாற்கந்தோர் வீதியைச் சேர்ந்தவரும், சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கத் தலைவருமான இராமலிங்கம் இராஜகுலசிங்கம் அவர்கள் 6—11—99 சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் பராசக்தி தம்பதிகளின் அன்பு மகனும் ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜெயப்பிரவின் (கனடா), ராஜ்பிரமீலன் (கொழும்பு), ராம்பிரஜீவன் ஆகியோரின் அன்புத் தந்தையும் இராஜசுந்தரம் (லண்டன்), செல்வராணி (கொழும்பு), இராஜகுலேந்திரன் (கனடா), இராஜநாயகம் (கனடா), இராஜதுரை (கனடா), புஸ்பராணி (லண்டன்), இராஜநவநாதன் (லண்டன்), ஜெயராணி, இராஜமனோகரன் (ஆஸ்திரேலியா), இராஜவிக்கினேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் திலகவதி (லண்டன்), காலஞ்சென்ற செல்வரட்ணம், செந்திமலர் (கனடா), நளாயினி (கனடா), சுசீலாதேவி (கனடா), குகதாசன் (லண்டன்), சியாமளா (லண்டன்), சிறீதரன் (J. S. T., சாவகச்சேரி), ரதி(ஆஸ்திரேலியா), மைத்திரி(கனடா), பத்மநாதன், பரமேஸ்வரி, புவனேஸ்வரி, இராஜேஸ்வரி, நாகேஸ்வரி, பரமநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற சந்திரசேகரம், கனகரட்ணம் (C. T. B., கோண்டாவில்), காலஞ்சென்ற திருநாவுக்கரசு, கந்தையா, காலஞ்சென்ற சாந்தநாயகி ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10–11–99) புதன்கிழமை பிற்பகல் 2. 00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
இ. ராம்பிரஜீவன் (மகன்)
மு. சிறீதரன் (J. S. T. சாவகச்சேரி)

"சக்தி",
தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி. (சி/9776)

## சின்னப்பு மார்க்கண்டு

((இளைப்பாறிய இலிகிதர், கச்சேரி)

மிருசுவில் உசனைப் பிறப்பிடமாகவும் 38, பாரதி வீதி கச்சேரியடியை வதிவிடமாகவும் கொண்ட சின்னப்பு மார்க்கண்டு அவர்கள் 9–11-99 இல் காலமானார்.

இவர் மங்கையற்கரசியின் அன்புக் கணவரும் இரவீந்திரன் (ஆங்கில போதனாசிரியர், யாழ். பல்கலைக்கழகம்), மகேந்திரன் (கிராம அலுவலர்), ரஜனி மாலா, சாந்தினி மாலா (ஆசிரியை, புனித றோக் வித்தியாலயம்), தர்சினி மாலா (ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தந்தையும் விமலாதேவி, மீரா (ஆசிரியை), இரவீந்திரநாயகம் (நில அளவையாளர், வவுனியா), தர்மராஜன் (ஆசிரியர், யா/ கனகரத்தினம் ம. ம. வித்.) ஆகியோரின் அன்பு மாமனாரும் பகவதி வேலுப்பிள்ளை, சி. கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10–11–99) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மா. இரவீந்திரன்,
[மகன்]

38, பாரதி வீதி,
கச்சேரியடி, யாழ்ப்பாணம். (70843)

## பழனிப்பிள்ளை இராசமாணிக்கம்

அல்வாய் வடக்கைச் சேர்ந்த பழனிப்பிள்ளை இராசமாணிக்கம் அவர்கள் 09 – 11 – 99 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பழனிப்பிள்ளை சின்னமணி ஆகியோரின் பாசமிகு மகனும் பரிபூரணத்தின் அன்புக் கணவரும் காலஞ் சென்ற நாகமுத்து – செல்லம்மாவின் அன்பு மருமகனும் திருமதி இராஜசுலோசனி, இராஜேஸ்வரன் (மட்டு நகர்), இராசநாயகம், இராஜசுந்தரம் (ஜேர்மனி), இராஜலட்சுமி, காலஞ்சென்ற இராசநாயகி, இராஜேஸ்வரன் (நேசன் – சுவிற்சலாந்து), இராஜஸ்ரீ, இராஜகிருஷ்ணன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி நாகம்மா இராசையா, திருமதி இரத்தினம் சிவனொளிபாதம், சிவலிங்கம் (வலையன்மடம்), இராஜரத்தினம், தங்கவடிவேல், திருமதி சிவபாக்கியம் தங்கத்துரை (கொழும்பு), இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் லயன் இரா. இராஜேஸ்வரன் (உதவிப் பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம்), சிவமலர், சக்திதேவி (ஜேர்மனி), இந்திரன், சுதர்சனா ஆகியோரின் அன்பு மாமனாரும் இராஜவர்மன் (மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்), இராஜவர்த்தனி ( விஞ்ஞானபீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்), இராஜவினோதினி (மட்டு நகர்), இந்திரவர்மன் (மட்டு நகர்), பிரசாந்த், சுரேகா, நிசாந்த், ராகினி (ஜேர்மனி), சயந்தினி ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் காலஞ் சென்ற சின்னத்துரை, இராசையா மற்றும் சிவனொளிபாதம், சித்திவிநாயகம், சிவராஜா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இன்று ( 10–11–99 ) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் பருத்தித்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
லயன் இரா. இராஜேஸ்வரன்
(மருமகன்)

'குற்றாலம்',
நக்கீரன் வீதி,
அல்வாய் வடக்கு, அல்வாய். (70858)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## செய்தித் தணிக்கை

போர் தொடங்கியதும் அது தொடர்பான பொய்யும் பிறக்கும் என்று பரவலாகப் பேசப்படுவது உண்டு. தொலைவில் நடக்கும் போர் குறித்து மக்களுக்கு சரியான தகவல்கள் கிடைப்பதில்லை என்ற அர்த்தத்தில் மேற்கண்ட வாசகம் அடிக்கடி எடுத்துக்காட்டப்படுவது வழக்கம்.

போர்ப் பிரதேசத்திலும் சரி, அது நடைபெறும் நாட்டிலும் சரி போர்முனை நிகழ்வுகள் பற்றி அனேகமாக வதந்திகளே பரப்பப்படுவது உண்டு. இதன் விளைவாக வேண்டாத பதற்றமும் ஆபத்தான விளைவுகளும் தோன்றும்.

போர் நிலைமைகள் குறித்த தகவல்களை அறிவது மக்களின் உரிமை என்பதை மறந்து சுயலாபக் கருதி அரசுகள் செய்தித் தணிக்கையை அமுல் செய்கின்றன. இது எங்கள் நாட்டில் மட்டுமின்றி ஏனைய நாடுகளிலும் நடைபெறும் ஒன்றுதான்.

எனினும் செய்தித் தணிக்கை எப்போதும் எதிர்பார்ப்பதற்கு மாறான விளைவுகளையே தருவது உண்டு. இதனை உணர்ந்து கொள்ளாமல் அரசாங்கம் மீண்டும் ஒரு முறை செய்தித் தணிக்கையை அமுல் செய்துள்ளது. இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் இத்துடன் நான்கு தடவைகள் செய்தித் தணிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனநாயக நாடு ஒன்றில் எந்த விடயத்திலும் உண்மையை அறியும் உரிமை மக்களுக்கு இருக்க வேண்டும். இலங்கையில் மக்களிடம் அறவிடப்படும் பாதுகாப்பு வரியைக் கொண்டும் நாட்டின் வருமானத்தைக் கொண்டுமே போருக்கான நிதி பெறப்படுகிறது. ஆகையால் போர்ச் செய்திகளை அறியும் உரிமை பொதுமக்களுக்கு உண்டு. அதே போன்று போர்ச் செய்திகளை வெளியிடும் உரிமை ஊடகங்களுக்கு உண்டு.

நாட்டின் பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படும் என்ற போர்வையில் போர்முனைச் செய்திகளுக்குத் தணிக்கை விதிப்பது எந்த வகையிலும் பொருத்தமானதல்ல. மக்களினதும் ஊடகவியலாளர்களினதும் உரிமைகள் இதனால் மறுக்கப்படுகின்றன. எல்லாவற்றையும் வெளிக்காட்டும் கொள்கையை (Tranparent Policy) கடைப்பிடிப்பதாகக் கூறும் இன்றைய அரசாங்கம் போர்முனைச் செய்திகளுக்கு மட்டும் அதிலிருந்து விதிவிலக்கு அளிப்பது எந்த வகையில் நியாயமானது?

எனவே, சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது போல இராணுவச் செய்திகள் மீதுவிதித்துள்ள தணிக்கையை அரசு நீக்க வேண்டும்.

மிகக் குறிப்பாக ஜனாதிபதித் தேர்தல் குறித்து அறிவித்த பின்னர். செய்தித் தணிக்கை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருப்பது நேர்மையான தேர்தல் ஒன்றுக்குப் பலவகைகளாலும் குந்தகம் விளைவிக்கும். உண்மைகள் மறைக்கப்படுவதால் மக்களின் மன விருப்பு வெறுப்புக்களில் மாற்றங்களையும் பாதிப்புக்களையும் செய்தித் தணிக்கை கொண்டுவரும்

நேராகச் சொல்வதானால் மக்கள் தமது வாக்குரிமையை பயன்படுத்தும் போது போரின் தாக்கங்களையும் சரி வெற்றிகளையும் சரி, அறிந்துகொள்ள முடியாத நிலையில் மனத்தில் சமன்செய்து சீர்தூக்கி செயற்படமுடியாத நிலை செய்தித் தணிக்கை மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.

இதனைக் கருத்திற் கொண்டேனும் மக்களுடைய தகவல் அறியும் உரிமையை நிலைநாட்ட – செய்தித்தணிக்கையை நீக்க — அரசாங்கம் முன்வர வேண்டும்; அதுகுறித்து பரிசீலிக்க வேண்டும்.

# மதமாற்றம் தொடர்பாக தேசிய விவாதம் வேண்டும்

## பாரதீயஜனதா கட்சிச் செயலர்கோருகிறார்

சென்னை, நவ. 10

இந்தியாவில் மதமாற்றம் இடம்பெறுவது குறித்து நாடளாவிய ரீதியில் விவாதம் ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று பாரதிய ஜனதாக் கட்சி செயலாளர் வெங்கையா நாயுடு தெரிவித்தார்.

சென்னை விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இரண்டுநாள் விஜயம் மேற்கொண்டு இந்தியாவுக்கு வருகை தந்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் மதம் என்பது ஒவ்வொருவரது தனிப்பட்ட உரிமை என்று தெரிவித்திருந்தார். இது தொடர்பாகக் கருத்து வெளியிடும்போதே வெங்கையா நாயுடு இவ்வாறு தெரிவித்தார்.

மதத்தைப் பின்பற்றுவது ஒருவரது தனிப்பட்ட உரிமை என்பதைப் பாரதீய ஜனதாக் கட்சி ஏற்றுக்கொள்கிறது. அதே நேரம் ஏழை மக்களைக் கட்டாயப்படுத்தி மதமாற்றம் செய்வதைக் கட்சி எதிர்க்கும். சமத்துவம் என்ற பெயரில் மதமாற்றம் செய்வது குறித்து பாரதீய ஜனதாக்கட்சி கவலை அடைந்துள்ளது. மனித சமுதாயத்திதுக்குச் செய்யும் சேவைமதத்துடன் சம்பந்தப்பட்டதாக இருக்கக்கூடாது.

சமுதாயத்தில் சம உரிமை ஏற்படுவதற்கு மதமாற்றம் ஒன்றே வழி என்று கூறி மத மதமாற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. இது குறித்து தேசிய அளவில் விவாதம் நடத்தப் படவேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சி விரும்புகின்றது.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். [இ-6-9]



இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு கடந்த வெள்ளியன்று இந்தியா வந்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பருக்கு சனியன்று புதுடில்லியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் உத்தியோகபூர்வ வரவேற்பளிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம் இது இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி ஆகியோரும் காணப்படுகின்றனர்.

### போபர்ஸ் ஊழல் வழக்கு:

# ராஜீவின்பெயரை நீக்கக் கோரி டில்லி நீதிமன்றில் மனு தாக்கல்

புதுடில்லி, நவ. 10

போபர்ஸ் ஊழல் வழக்கில் சீ. பி. ஐ. தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையில் இருந்து முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் பெயரை நீக்குமாறு கோரி புதுடில்லி உயர் நீதிமன்றம் ஒன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

''ராஜீவ்காந்தி ஏக்தா சமிதி'' என்ற அமைப்பு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளது.

இந்த மனுமீதான விசாரணை எதிர்வரும் 18 ஆம் திகதி இடம்பெறும் என்றுநீதிபதி சிரியாக் ஜோசப் தெரிவித்தார்.

'சமிதி' சார்பில் ஆஜரான சட்டத்தரணி விஜய் சுக்லா இறந்தவரின் பெயரை குற்றப்பத்திரிகையில் சேர்ப்பதுசட்டவிரோதம் என்றார்.

எனவே ராஜீவ்காந்தியின் பெயரை குற்றப்பத்திரிகையில் இருந்து நீக்க வேண்டும்என்று அவர் நீதிமன்றைக் கேட்டுக் கொண்டார்.

ராஜீவ்காந்தியின் பெயரை நீக்குவதற்கான 42 காரணங்களை அவர் நீதிமன்றத்தின் முன்வைத்தார்.

**உலக அரங்கில்**

இந்த மனு தொடர்பாக விசாரித்த நீதிபதி இந்த அமைப்பு அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு அல்ல அதன் சட்ட திட்டங்கள் குறித்து நீதிமன்றுக்கு அறிவிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

### பாகிஸ்தான்

# நம்பிக்கை ஊட்டும் விதத்தில் நடந்தால் பேசுவதற்குத் தயார்

## இந்திய ஜனாதிபதி தெரிவிப்பு

வியன்னா, நவ. 10

நம்பிக்கை ஊட்டும் வகையில் பாகிஸ்தான் செயற்பட்டால் அந்த நாட்டுடனான அமைதிப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இந்தியா தயாராக உள்ளது என்று இந்திய ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் தெரிவித்துள்ளார்

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஆஸ்திரியா சென்றுள்ள இந்திய ஜனாதிபதி நேற்று முன்தினம் ஆஸ்திரிய அதிபருடன் சேர்ந்து கூட்டாக நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

பாகிஸ்தானில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை இந்தியா மிக உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. இரு நாடுகளுக்கிடையிலான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கு பாகிஸ்தானுடன் பேச்சு நடத்த வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக உள்ளது.

இந்தியா நடத்திய அணுப் பரிசோதனை ஏனைய நாடுகளை அச்சுறுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டதல்ல. அணு ஆயுத ஒழிப்பு பற்றிய தனது வாதத்துக்கு வலு சேர்க்கவே இந்தியா அணுப் பரிசோதனையை நடத்தியது.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

[இ-6-9]

## நாளை

ஐப்பசி 25

வியாழக்கிழமை

திதி: திருதியை

பிற்பகல் 3. 25வரை

நட்சத்திரம்: கேட்டை

பிற்பகல் 2. 36 வரை

சுபநேரம்: 7.36— 9.06

ராகுகாலம்: 1.36—3.06

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

அறியாமை இரகசியத்தின் தாய், துன்பத்தின் பிறப்பிடம்; குருட்டு நம்பிக்கையின் அன்னை; சங்கடம் தோன்றிய இடம்; அழிவும் வறுமையும் வாழும் தாயகம்.

இங்கர்சால்

# சுரங்க ரயிலைக் கடத்திய ஜேர்மன் இளைஞன் கைது

## மியூனிச்சில் சம்பவம்

பேர்லின், நவ. 10

ஜேர்மனியின் மியூனிச் பகுதியில் சுரங்கப் பாதையில் செல்லும் ரயில் ஒன்று நேற்று முன்தினம் இளைஞர் ஒருவரால்கடத்தப்பட்டது.

எனினும் பின்னர் ரயில் மீட்கப்பட்டு அந்த இளைஞர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தான் வசிப்பதற்கு ஒரு வீடு இல்லை என்பதால் அரசாங்கம் தனக்கு ஒரு வீடு தர வேண்டும் என்றும்—

அதற்காகவே தான் ரயிலைக் கடத்தியதாகவும் — 22 வயதான அந்த இளைஞன் பொலீஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இந்த இளைஞன் இவ்வாறு சுரங்க ரயிலைக் கடத்தியது இதுஇரண்டாவது தடவை என்று ஜேர்மனியப் பொலீஸார் தெரிவித்தனர்.

(இ - 6-9)

# ரஷ்யப்படைகள் பயன்படுத்தும் குண்டுகளில்உலோகக் கம்பிகள்

குறோஸ்னி, நவ. 10

செச்சினியாவில் தாக்குதல் நடத்திவரும் ரஷ்யப் படையினர் கிளர்ச்சியாளர்களுக்கு அதிக சேதம் விளைவிப்பதற்காக உலோகக் கம்பிகள் அடங்கிய குண்டுகளைப் பயன் படுத்துவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

செச்சினியாவில் இருந்து உயிர் தப்பி ஓடி வரும் மக்கள் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளனர்.

தலைநகர் குறோஸ்னியைக் கைப்பற்றும் நோக்கத்துடன் ரஷ்யப் படைகள் நகர் மீது கடும் விமானத் தாக்குதல்களை நடத்தி வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அதே சமயம்

ரஷ்யப் படைகளின் தாக்குதல்களில் இதுவரை ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளதாகவும் —

சுமார் 2 லட்சம் மக்கள் நாட்டைவிட்டு பாதுகாப்பான இடங்களுக்குத் தப்பி ஓடிவிட்டதாகவும் —

குறோஸ்னியில் அதிகாரிகள் அறிவித்துள்ளனர். (ஐ-6)

# சவூதியில் பெணகளுக்கு அ. அட்டை

சவூதி அரேபியாவில் பெண்களுககு அடையாள அட்டைகள் வழங்கப்பட உள்ளதாக நாட்டின் உள்துறை துணை அமைச்சர் தெரிவித்துள்ளார். இது வரை காலமும் ஆண்களுக்கு மட்டுமே சவூதியில் அடையான அட்டைகள் வழங்கப்பட்டு வந்தன.

பெண்கள் ஆண்களுக்கு எல்லா வகையிலும் இணையானவர்கள். அவர்களுக்கு அனைத்திலும் உரிமையுண்டு. தமது சொந்த அடையாள அட்டைகளைக் கொண்டு செல்ல பெண்களுக்கு சட்டபூர்வ உரிமை உண்டு என்று இளவரசர் அகமது பின் அப்துல் அஸீஸ் கூறினார்.

(இ-6-19)

### ஒரிஸாவில்

# புயலால் உயிரிழந்தோர் எண்ணிக்கை அதிகரிப்பு

புதுடில்லி, நவ.9


இந்தியாவின் ஒரிஸா மாநிலத்தில் அண்மையில் வீசிய கடும்புயல் காரணமாக உயிரிழந்தவர்களின் — எண்ணிக்கை 3 ஆயிரத்து 451 ஆக உயர்ந்துள்ளது.

கடற்கரையோர மாவட்டமான ஜெகத்சிங்பூரில் ஆயிரத்து 500 சடலங்கள் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த மாவட்டத்தின் கிராமங்களை மூடியிருந்த வெள்ள நீர் வடிந்ததை அடுத்து இந்தச் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ஏராளமான கால்நடைகளும் இப்பகுதியில் இறந்து காணப்படுகின்றன.

மாவட்டத்தில் உயிர் தப்பியுள்ள ஏனைய மக்களை உடனடியாக அங்கிருந்து வெளியேற்ற வேண்டும் என்று உதவிப் பணிகளில் ஈடுபட்டுள்ள இராணுவம் மாநில அரசுக்கு யோசனை கூறியுள்ளது.

இறந்த சடலங்களினால் அப்பகுதி குடிதண்ணீர் உட்பட சூழல் பெரிதும் மாசடைந்துள்ளது. இதனால் தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது. எனவே மக்கள் உடனடியாக வெளியேற்றப்பட வேண்டும் என்று இராணுவம் கோரியுள்ளது. [ஐ 6]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




அண்மையில் கல்விச் சுற்றுலா மேற்கொண்ட ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்கள் 'உதயன்' பணிமனைக்கும் வந்திருந்தனர். உதயன் அச்சு இயந்திரப் பகுதியையும் கணனிப் பிரிவையும் மாணவர்கள் பார்வையிடுவதை படத்தில் காணலாம். (ஐ)



யாழ். நகரப் பகுதியில் உள்ள வீட்டுத் தோட்டம் ஒன்றில் வாழை ஈன்ற அதிசயக் குலையைப் படத்தில் காணலாம். இந்த வாழைக்குலையின் உயரம் 5 அடி 10 அங்குலம். வீட்டு உரிமையாளரான 87 வயது நிரம்பிய ஓய்வுபெற்ற வங்கி உத்தியோகத்தர் ஆர்.எஸ். அரியரத்தினம் தாம் உற்பத்திசெய்து சாதனை படைத்த வாழைக்குலையுடன் காணப்படுகிறார். (ஐ)

## விஞ்ஞான தின விழாவும் மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம், நவ.10

யாழ்.இந்துக்கல்லூரியின் விஞ்ஞான மன்றம் நடத்தும் விஞ்ஞான தின விழாவும் 'இந்து விஞ்ஞானி' மலர் வெளியீடும் இன்று புதன் கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளன. (க)


**சிவகஜன் தொலைத் தொடர்பு நிலையம்**

SIVAGAJAN COMMUNICATION

MARKET LANE, KODIKAMAM.

சந்தை வீதி, கொடிகாமம்.

1/11/99 தொடக்கம் 24 மணிநேர மகத்தான சேவையில் உள்நாட்டு வெளிநாட்டு சேவைகளை உடனுக்குடன் பெற்றுக் கொடுக்கும் ஒரே இடம்

**சிவகஜன் தொலைத்தொடர்புசேவை**

உள்ளூர்:- 070 - 212747

வெளியூர்:- 0094 - 70 212747

(70821) உரிமையாளர்



**மங்களகரமான திறப்பு விழா**

இன்று (10-11-99) புதன்கிழமை

பகல் 1.45 மணியளவில்

**பழம்பதியான் தொலைபேசி சேவை**

'பழம்பதி வாசா'

மல்லாகத்தில் ஆரம்பித்துவைக்கப்படும்.

என்பதை அன்பர்கள், நண்பர்கள்

அனைவருக்கும்

அறியத் தருகின்றோம்.

உள்நாடு - 070 - 212667

வெளிநாடு - 0094 - 70 - 212667

- உரிமையாளர்.

பழம்பதியான் தொலைபேசி சேவை,
"பழம்பதி வாசா"
மல்லாகம்.
(பழம்பதி விநாயகர் ஆலய தெற்கு வீதி)

(70828)


## பாடசாலைகளில் விரைவில் விளையாட்டு முற்றம்

யாழ்.குடாநாட்டிலுள்ள சகல பாடசாலைகளிலும் நாடகப் போட்டிகள் மற்றும் விளையாட்டுமுற்றம் அமைத்தல் ஆகியன விரைவில் செயற்படுத்தப்படவுள்ளன.

ஆரம்பக்கல்வியின் சீர்திருத்தத்தைக் குறிக்கோளாகக்கொண்டு செயற்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தில் விளையாட்டு முற்றம் அமைப்பதற்கான ஆலோசனைகள், வழிவகைகள் என்பனவற்றை பெற்றோர்கள், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள் மற்றும் பொதுநிறுவனங்களிடம் பெற்றுக்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)


# ஒரு கணக்கில் பல நன்மைகள்

கொமர்ஷல் வங்கியின் 3 வருட நிலையான **வைப்புக் கணக்கை** ஒரு முழுநிறைவான கணக்கு என்று நீங்கள் அழைக்கலாம். ஏனெனில் அது உங்களுக்கு 13% * வருடாந்த வட்டியை (முதிர்ச்சியில்) தருவது மட்டுமன்றி இன்னும் எத்தனையோ நன்மைகளையும் வழங்குகிறது.

நீங்கள் ரூ. 100,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை முதலீடு செய்ய விரும்பினால் எமது 3 வருட நிலையான வைப்புக் கணக்கு மிகச் சிறந்த வழியாகும். இதோ, உங்களுக்குக் கிடைக்கும் அனுகூலங்கள்:

* வட்டியை உங்கள் விருப்பப்படி மாதாந்தம், காலாண்டு தோறும், அரையாண்டு தோறும், வருடாந்தம் அல்லது கணக்கின் முதிர்ச்சியில் பெற்றுக்கொள்ள முடியும்.

* முதலாவது அல்லது இரண்டாவது வருட முடிவில் நீங்கள் விரும்பினால் வைப்புத் தொகையை மீளப்பெறலாம்.

* உங்களுக்கு ஆயுள் காப்புறுதி வசதியும் கிடைக்கும்.

* வைப்புத் தொகையில் 90% வரையிலான ஒரு தொகையைக் கடனாக அல்லது வங்கி மேலதிக பற்றாக உடனடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

* கிறெடிட் கார்ட் வசதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

* வழமையான குறைந்தபட்ச வைப்புத்தொகை நிபந்தனை இல்லாமலே நடப்புக் கணக்கொன்றை ஆரம்பிக்க முடியும்.

* பிணை வைப்பு இல்லாமலே பாதுகாப்புப் பெட்டக (Safe Lockers) வசதியைப் பெறலாம் (பெட்டகங்கள் இருக்கும் கிளைகளில்)

இன்றே அண்மையிலுள்ள கொமர்ஷல் வங்கிக் கிளைக்குச் செல்லுங்கள். எமது 3 வருட நிலையான வைப்புக் கணக்கில் முதலீடு செய்து உங்கள் சேமிப்புக்களுக்கு அதிகபட்ச ஆதாயத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

* வருடாந்த தேறிய வட்டி 11.6%

**கொமர்ஷல் வங்கி**

உங்கள் ஆதாயமே எங்கள் நோக்கம்

(C/9722)


## சைக்கிள் திருடிவந்தவர் கைதானார்

நெல்லியடி,நவ.10

வடமராட்சியிப் பகுதியில் அண்மைக் காலமாக இடம்பெற்று வந்த சைக்கிள் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டுவந்த இளைஞர் ஒருவர் நெல்லியடிப் பகுதியில் வைத்து பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டார். களவாடப்பட்ட ஐந்து சைக்கிள்கள் அவரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை நாலாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை நவஜீவனன் (வயது 27) என்னும் இளைஞரே நெல்லியடி பொலீஸாரினால் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் பொலீஸாருக்கு கொடுத்த தகவலையடுத்து, பருத்தித்துறை, புலோலி, கிராமக்கோட்டுச்சந்தி, நெல்லியடிப் பகுதிகளில் உள்ள சில வீடுகளில் இவரினால் கைவிடப்பட்ட நிலையில் இருந்த களவாடப்பட்ட ஆண்களுக்கான சைக்கிள்3, பெண்களுக்கான சைக்கிள் 2 என்பன நெல்லியடிப் பொலீஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த சந்தேகநபர், மறுநாள் காலை பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவான் அ.க.நடராஜாவின் வாசஸ்தலத்தில் அவர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் அவரை இருவார காலம் விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-109)

## வாராந்த நிகழ்வு

தொண்டமனாறு, நவ.10

தொண்டமனாறு சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் தொண்டமனாறு அருள்மிகு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு "திருவருள்" என்ற தலைப்பில் இசைப்புலவர் தி.செல்வமனோகரன் உரைநிகழ்த்துவார்.

பேரவையின் தலைவர் சு.திருபரங்கிரிநாதன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறும்.

இந்நிகழ்விற்கான அறிமுக உரையை யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் தி.வேல்நம்பி நிகழ்த்துவார்.

நண்பகல் 12.30 மணிக்கு அன்னதானம் வழங்கப்படும். (ஐ-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் குடாநாட்டில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் / ஐ.நா. திட்ட சேவைகள் அலுவலகம்/யாழ்ப்பாணம் புனர்வாழ்வு மீள்குடியேற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் (UNDP / UNOPS/JRRP) கண்ணிவெடி விழிப்புணர்வுத் திட்டம்.

இதழ் -2

## கண்ணிவெடி விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்



கண்ணிவெடி விழிப்புணர்வு நிகழ்ச்சி - அருணோதயா கல்லூரியில் நடைபெற்ற கண்காட்சியின் போது. . . . .

கண்ணிவெடி விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தின் தொடர் நிகழ்ச்சிகள் பாடசாலை மட்டத்திலும் சமூக மட்டத்திலும் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன. ஒக்டோபர் 26ம் திக்தி செவ்வாய்க்கிழமையன்று அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் நடைபெற்ற கண்காட்சியில் இவ்வாறான ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. இந்நிகழ்விலே வெடிக்கத்தக்க பொருட்களின் படங்களும், மிதிவெடி வகைகளின் படங்களும் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. அத்துடன் இவ்வெடி பொருட்களினால் ஏற்படக்கூடிய அபாயங்கள், இவை பொதுவாக இருக்கக்கூடிய இடங்கள் போன்ற பல செய்திகளும் படங்களும் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. அத்துடன் மிதிவெடியினால் காலை இழந்த மூவர் நடனம் ஆடி பார்வையாளரின் கவனத்தை ஈர்த்தனர். இதனைத் தொடர்ந்து கண்ணிவெடி போன்று நடித்த ஒருவர் தனது அபாயகரத்தன்மை, தான் பொதுவாக காணப்படும் இடங்கள், தன்னைக் கண்டால் என்ன செய்ய வேண்டும் போன்ற செய்திகளை கூடியிருந்தவர்கள் மனதில் பதிய வைத்தார். இது போன்ற நிகழ்வுகள் சமூக மட்டத்திலும் மேலும் தொடரவுள்ளன.

## சிறுவர் பாதுகாப்பு நிதியமும் வெடிபொருட்கள் விழிப்புணர்வுத்திட்டமும்

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உளநல மேம் பாட்டு திட்டத்தில் வெடி பொருட்கள் விழிப்புணர்வுத் திட்டமும் ஓர் அம்சமாகும். இத் திட்டமானது குறிப்பாக பாடசாலை செல்லாத சிறுவர் களை மையமாக வைத்து செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் நோக்கமானது சிறுவர் வெடிபொருட்களை கையாள்வதால் ஏற்படும் காயங்களையும் உயிர் இழப்புக்களையும் குறைப்பது ஆகும். 1999ம் ஆண்டு யூனிலிருந்து ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் கண்ணிவெடிகள் அகற்றிவருவதுடன் கண்ணிவெடி விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வருகிறது. அவர்களுடன் இணைந்து சிறுவர் பாதுகாப்பு நிதியமும் வெடிபொருள் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் இத்திட்டத்திற்கு 25 சிறுவர் பயிற்சியாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டு அவர்கள் தமது சகாக்களுக்கு விழிப்புணர்வுத் திட்டங்களை மேற்கொண்டு வருகிறார்கள். சிறுவர் பயிற்சியாளர்களின் ஆற்றல்களை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் அவர்களுக்கு சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப் பிரிவினரால் மூன்று நாட்கள் முதலுதவிப் பயிற்சியளிக்கப்பட்டது. இப் பயிற்சி நெறியில் முதலுதவிக் கோட்பாடும் செய்முறைப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. இவர்கட்கு முதலுதவிப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் உளநல முதலுதவிப் பயிற்சியும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

**மிதிவெடி விபத்தொன்றில் ஒற்றைக்காலினை இழந்துள்ளவரான இரத்தினகுமார் உதயகுமார் என்பவரை அருணோதயாக் கல்லூரியில் நடைபெற்ற விழிப்புணர்வு கண்காட்சியில் பேட்டி கண்டோம். அப்பேட்டியினை இங்கு தருகின்றோம்.**

கே: உதயகுமார் அவர்களே உங்களைப்பற்றியும் உங்கள் குடும்பநிலை பற்றியும் கூறுவீர்களா ?

ப: ஆம், எனக்கு 21 வயது நான் குடும்பத்தில் நான்காவது பிள்ளை. ஆறு பெண்களும் ஆறு ஆண்களுமாக மொத்தம் 12 பிள்ளைகள் எமது குடும்பத்தில் உள்ளனர். நான் ஆண்டு ஒன்பது வரை கல்வி கற்றேன். எனது தாய் தந்தையர் கச்சான் வியாபாரம் செய்கின்றார்கள்.

கே: எவ்வாறு நீங்கள் கண்ணிவெடியில் சிக்கினீர்கள் ?

ப: நான் மேசன் கூலித் தொழிலாளியாக இருந்ததுடன் முயல் வளர்ப்பிலும் ஈடுபட்டு வந்தேன். 1997 ம் ஆண்டு 9ம் மாதம் முயலுக்கு குழை வெட்டுவதற்காக மல்லாகம் பஸ் டிப்போவிற்கு அருகில் உள்ள மலசல கூடத்தில் ஏறிக் குழை ஒடித்து விட்டு இறங்கும் போது மிதிவெடி வெடித்ததனால் எனது காலை இழந்தேன்.

கே: காலினை இழந்தவுடன் உங்கள் மனநிலை எவ்வாறு இருந்தது ?

ப: ஒற்றைக் காலில் இருந்து கொண்டு என்ன செய்யப் போகிறேன் என்ற அங்கலாய்ப்புடன் மனம் வெறுத்துப் போய் இருந்தேன். நாட்கள் செல்லச் செல்ல ஜெய்ப்பூர் நிறுவனத்தினர் செயற்கைக் கால் போட்டு நடக்கலாம் என்ற நம்பிக்கையை தந்ததனால் மனம் சற்று ஆறுதல் அடைந்தது.

கே: தற்போது செயற்கைக்கால் போட்ட பின்னர் உங்கள் மனநிலை எவ்வாறு உள்ளது ?

ப: நான் எனது காலை இழப்பதற்கு முன் இருந்த மனநிலையில் இப்போது இருக்கிறேன். முன்பு போல் எல்லாவற்றையும் செய்துகொள்ளமுடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இப்போது நான் கச்சான் வியாபாரம் செய்து வருகிறேன்.

கே: இவ்விபத்து ஏற்படமுன்னர் நீங்கள் கண்ணிவெடி சம்பந்தமான விழிப்புணர்வினை எங்காவது பெற்றீர்களா ?

ப: இல்லை.

கே: எம்மக்களுக்கு கண்ணிவெடி சம்பந்தமான விழிப்புணர்வு அவசியமா ?

ப: ஆம்.

கே: ஏன் ?

ப: நாம் இடம்பெயர்ந்து மீளக் குடியேறிய போது கண்ணிவெடி சம்பந்தமான விழிப்புணர்வினை பெறாதபடியினால் எமக்கு அதன் ஆபத்து, தாக்கங்களை புரிந்து கொள்ள முடியாது போய்விட்டது. இதனால் எனது காலை இழக்க நேரிட்டது. எனவே விழிப்புணர்வு அவசியம். இப்படி ஒரு விழிப் புணர்வினை ஏற்படுத்தினால் எல்லா மக்களும் தம்மை இவ்வாறான இழப்புக்களில் இருந்து பாதுகாத்துக் கொள்வார்கள்.

கே: நீங்கள் மக்களுக்கு என்ன அறிவுரை கூறவிரும்புகிறீர்கள் ?

ப: கண்ணிவெடிகள், வெடிக்கத்தக்க வெடிபொருட்கள் சம்பந்தமாக அவதானமாக நடந்து கொள்ள வேண்டும் என்ற அறிவுரையை கூற விரும்புகிறேன். அவ்வாறு நடக்கத்தவறின் என்னைப்போல் சிறிய வயதில் அவயவத்தை இழக்க வேண்டிய நிலை ஏற்படும் என கூற விரும்புகின்றேன்.

## சிவப்பு முக்கோணம்




சிவப்பு முக்கோணம் கண்ணிவெடிகள் காணப்படும் இடங்களை அடையாளப்படுத்த பயன்படுத்தப்படும். இச்சிவப்பு முக்கோணம் கண்ணிவெடி அகற்றும் குழுவினராலும் அவர்கள் வேலை செய்யும் இடங்களிலும் பயன்படுத்தப்படுகிறது.

* சிவப்பு முக்கோணத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட பகுதியினுள் நுழைய வேண்டாம்.

* சிவப்பு முக்கோணத்தினை ஒருபோதும் அது காணப்படும் இடத்திலிருந்து அகற்ற வேண்டாம்.

* கண்ணிவெடி அகற்றுவோர் பணிபுரியும் பகுதியினுள் நுழைய வேண்டாம்.

சிவப்பு முக்கோணத்தின் பின் பக்கம் வெள்ளை நிறமாக காணப்படும். நீர் சிவப்பு முக்கோணத்தின் வெள்ளை நிறப் பகுதியை காணக் கூடியதாக இருப்பின் நீர் கண்ணிவெடி உள்ள பகுதியினுள் நிற்கின்றீர் என்பதை அறிந்து கொள்ளலாம்.

## மிதிவெடிகள் பொதுவாக காணப்படும் இடங்கள்

❖ கைவிடப்பட்ட பழைய காவலரண் பகுதிகள்
❖ பாவனையற்ற கிணறுகளுக்கு அண்மையில்
❖ கைவிடப்பட்ட விவசாய நிலங்கள்
❖ கைவிடப்பட்ட வீடுகள்
❖ பயன்தரும் மரங்களின் கீழ் (எலுமிச்சை, தென்னை)
❖ பற்றைகள், புதர்கள் மண்டியுள்ள பிரதேசங்கள்
❖ பாதையோரங்கள்

கடந்த இதழில் தரப்பட்டிருந்த கவிதைத்தலைப்பிற்கு கவிதைகள் வரைந்த அனைவருக்கும் எம் நன்றியும் பாராட்டுக்களும். மிகச்சிறந்த கவிதையாக நா.கௌரி, "லலிதா வாசம்", புதிய செம்மணி வீதி, நல்லூர் வடக்கில் இருந்து வந்த கவிதை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## விதி எழுதிய பாதையில் மதியற்று சென்றதால் மிதிவெடியில் சிக்குண்டேன்

*அன்று ஆண்டவன் அழகாகப் படைத்த உலகிலே*
*மனிதனை அனுப்பினான் மகிழ்வுடன் வாழ்வதற்கு*
*தென்றல் காற்றும் தென்னை இளங்கீற்றும்*
*பச்சைப் பசேல் எனப் பரந்த புல்வெளியும்*
*மஞ்சள் வானமும் மதியொரு நட்சத்திரமும் என*
*எழில் கொஞ்சும் உலகிலே எக்களிப்போடு வாழ*
*எத்தனித்தான் மனிதனும்*

*இல்லிக்குடமாய் அவன் வாழ்வு இலட்சியமற்றுப் போனதால்*
*ஒட்பத்தை வீருத்தி செய்து ஒய்யாரமாய் வாழப்பார்த்தான்.*
*விஞ்ஞானம் என்று சொல்லி வீதி வரைந்த பாதையில்*
*விளையாட எண்ணினான்*
*அணுகுண்டைக் கண்டுபிடித்தான் அயல் நாட்டைப் பயமுறுத்த*
*ஆயுதங்களால் தன்னைத் தானே ஆற்றுப்படுத்த எண்ணினான்*
*தண்ணளி தொலைந்து போய் தடுமாறியது அவன் மனம்*
*தன் கையே தன் கண்ணை தாக்கப் போவதை அறியாமல்*
*கண்டு பிடித்தான் கண்ணிவெடியை*

*உழைப்பதற்காய் பெற்ற கைகால்களை இழப்பதற்காக*
*மண்ணுக்குள்ளே மிதிவெடியை மறைத்து வைத்தான் இரகசியமாய்*
*மிதிவெடிக்கு மதியில்லை குறிபார்த்து வெடிப்பதற்கு*
*குழந்தையா கிழவியா மாணவனா ஆசானா*
*உழவனா உத்தியோகத்தனா யார்தான் மிதித்தாலும்*
*வெடிக்கிறது மிதிவெடி*

*புல்லுக்கும் புதருக்கும் உள்ளே புதைந்திருக்கும் மிதிவெடி*
*பழைய காவலரண் அருகிலும் பதுங்கியிருக்கும் மிதிவெடி*
*சன சஞ்சாரமற்ற இடங்களிலும் சத்தம்மிடாதிருக்கும் மிதிவெடியென*
*எத்தனை பேர் எச்சரித்தும் கூட எடுத்தெறிந்து வீட்டு சென்றதால்*
*ஒற்றைக்கால் பறந்து போக ஊன்றுகோலிடம் தஞ்சம் வேண்டி*
*ஊமையாய் போனேன்... இல்லை வீதி எழுதிய பாதையில்*
*மதியோடு செல்லாததால் மிதிவெடியில் சிக்கி*
*வீழிக்கின்றேன் வழிதெரியாமல்*



இப் படத்தினை வரைந்தவர் ஸ்ரான்லி கல்லூரி ஆண்டு 11 மாணவி நா. துஷாந்தி. இதனைப் பார்க்கும் போது உங்கள் எண்ணங்களில் உதிக்கும் கற்பனைகளை கவிதை மூலம் எதிர் பார்க்கின்றோம் உங்கள் கவிதைகளை அனுப்பவேண்டிய முகவரி:

கண்ணிவெடி
விழிப்புணர்வு
செயற்பாட்டுக்குழு
அரசாங்க அதிபர்
செயலகம்
(கச்சேரி)
யாழ்ப்பாணம்.

இவ் இதழ் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களை ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். அவை இவ்விதழை மேலும் சிறப்பாக வெளியிட உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் நெகிழ்ந்த அஞ்சலிகள்

## கண்ணீர்க் காவியம்

# அமரர் இராமலிங்கம் இராஜகுலசிங்கம்

("சக்தி" தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.)



**தோற்றம்:** 10-09-1938 **மறைவு:** 06-11-1999

தலைவர்

**சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கம்**

சாவகச்சேரி

தென்மராட்சிப் பிரதேசத்தில் சாவகச்சேரியைத் தமது பிறந்த பூமியாகக் கொண்ட இராமலிங்கம் — பராசக்தி தம்பதியினர் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் கடமை புரிந்து இல்லறமாம் நல்லறத்தை இனிதே நடத்தி வந்தனர். அவர்கள் நானு ஓயா என்னும் இடத்தில் கடமை புரிந்த காலத்தில் 1938ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் பத்தாம் திகதி கண்டி மாநகரிலே மூன்றாவது தவப்புதல்வனாகப் பிறந்தார் இராஜகுலசிங்கம். ஏழு ஆண் சகோதரர்களையும் மூன்று சகோதரிகளையும் தன் உடன் பிறப்புக்களாகக்கொண்டு பெருமையுடன் வாழ்ந்தார்.

தனது ஆரம்பக் கல்வியை நானு ஓயாவில் பயின்றவர் நுவரெலியாவிலே கனிஷ்ட இடைநிலைக் கல்வியைத் தொடர்ந்தார். ரயில் நிலைய அதிபராகக் கடமையாற்றிய தந்தையார் இக்காலத்தில் தொழில் இடமாற்றம் பெற்றுக் கொழும்புக்குச் செல்லவேண்டியேற்பட்டது. அன்னையார் தம் குழந்தைகளுடன் சொந்த ஊரான சாவகச்சேரி திரும்பினார்.

இராஜகுலசிங்கம், சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலே தமது கல்வியைத் தொடர்ந்தார். சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையிலே திறமையாகச் சித்தியெய்தினார் அதனைத் தொடர்ந்து London Book – KeePers Champer of Commerce என்ற கல்வி நெறியைப் பயின்று அதிலும் திறமைச் சித்தி பெற்றார்.

### தொழிலதிபர்

கல்வித் தகைமைகளைப் பெற்றுக் கொண்ட இராஜகுலசிங்கம் யாழ்நகரிலே Samuel & Sous நிறுவனத்திலே முதன் முதலாகத் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டார். அதீத சிந்தனைத்திறன், செயலாற்றல் மிக்க இராஜகுலசிங்கத்துக்கு ஒரு நிறுவனத்திலே கட்டுப்பாடாக இருந்து தொழில் செய்வது திருப்தியளிக்கவில்லை. எனவே அத்தொழிலை விடுத்து சுதந்திரமான ஒரு தொழில் செய்யவேண்டும் என்ற பேரவாவினால் உந்தப் பெற்று 1963 ஆம்ஆண்டளவில் நீர்கொழும்பிலே இரும்புருக்குத் தளபாடங்கள் செய்யும் ஒரு தொழில் நிலையத்தை ஸ்தாபித்துக் கொண்டார்.

இரசனை மிகுந்த இராஜகுலசிங்கம் மிகக் குறுகிய காலத்திலேயே, காண்போரைக் கவரும் விதத்தில் விதம் விதமான அலங்கார அமைப்பைக் கொண்ட தளபாடங்களைச் செய்யும் விற்பன்னரானார். அதனால் தொழில் சிறக்க — வளம் பெருக — பெரிய தொழில் அதிபரானார்.

இக்காலகட்டத்திலே —

சிங்கப்பூரில் தொழில் செய்து விட்டுத் தம் சொந்த ஊருக்குத் திரும்பி சாவகச்சேரிப் பிரதேசத்தில் சைவமும் தமிழும் தழைத்து ஓங்கிய மட்டுவில் பதியிலே மாண்புற வாழ்ந்து வந்தனர் வல்லிபுரம் — வள்ளியம்மை தம்பதியினர். இவர்களது மூன்றாவது நற்புத்திரியாம் ஞானேஸ்வரியை 1971 ஆம் ஆண்டு இராஜகுலசிங்கம் தம் வாழ்க்கைத் துணைவியாக வரித்துக் கொண்டார். கணவனே கண்கண்ட தெய்வமென பணி செய்து வந்தார் ஞானேஸ்வரி, நலமுடன் — வளமுடன் — வாழ்ந்த தம்பதிகள் மூன்று சற்புத்திரர்களைப் பெற்றுமகிழ்ந்தனர்.

### சாவகச்சேரியில தொழிற்சாலை

1974 ஆம் ஆண்டளவில் நீர்கொழும்பில் இருந்து சாவகச்சேரி திரும்பிய இராஜகுலசிங்கம் இங்கும் நீர்கொழும்பில் செய்த அதே தொழிலைச் செய்ய விரும்பி தபாற்கந்தோர் வீதியிலே 'ரஜின்ட்ஸ் வெல்டிங் வேக்ஸ்' என்ற பெயரில் தொழில் நிலையத்தைத் தாபித்தார். மக்கள் விரும்பும் வடிவமைப்புக்களில் தளபாடங்களைச் செய்து பெயரும் புகழும் பெற்றார். இளைஞர்கள் பலர் இவரது தொழில் நிலையத்திலே தொழில் வாய்ப்புப் பெற்றனர் சிறந்த பயிற்சியையும் பெற்றுக் கொண்டனர். தாம் பெற்ற பயிற்சியினால் மேலை நாடுகளில் தொழில் வாய்ப்புப் பெறக்கூடிய தகுதியும் திறமையும் பெற்று இப்போது பல நாடுகளில் தொழில் செய்து வருகின்றனர்.

1990 ஆம் ஆண்டு பங்குனி மாதம் சாவகச்சேரியிலே வாகன விபத்தில் சிக்கிய இராஜகுலசிங்கம் தெய்வாதீனமாக உயிர் பிழைத்தார். அதே ஆண்டு கார்த்திகை மாதம் நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலையால் அவரது தொழில் நிலையமும் பெரும் பாதிப்புக்குள்ளாகத் தம் விருப்புக்குரிய தொழிலையும் கைவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளானார்.

பட்ட காலிலே படும் என்பார்கள் இதற்கு இவரும் விதிவிலக்கல்ல என்பதுபோல மீண்டும் 1990 ஆம் ஆண்டு மார்கழியில் விமானத்தாக்குதல் காரணமாக சிறு காயத்துக்குள்ளாகிச் சிகிச்சை பெற்றார். இவ்வாறு அடுத்தடுத்து ஏற்பட்ட இன்னல்கள் யாவற்றையும் மன உறுதியுடன் தாங்கி மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதை உணர்ந்து முழு நேரமும் சமூகப்பணி செய்வதையே தன் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டார்.

### கூட்டுறவுச் சேவை

தொடர்ந்து 18 ஆண்டுகளாகக் கூட்டுறவுச். சேவையில்ஈடுபட்டார். சாவகச்சேரிப்ப.நோ. கூ சங்கத் தலைமைப் பணிமனையுடன் இணைந்து செயற்பட்ட 1 ஆம் இலக்கக் கிளையை மக்களின் வசதி கருதி மக்களின் பூரண ஒத்துழைப்புடன் சாவகச்சேரி டச் வீதிக்கு மாற்றிய பெருமை இராஜகுலசிங்கம் அவர்களையே சாரும். கிளைக்குழுவின் தலைவராகவும் அவர் நீண்ட காலம் பணி செய்தார்.

கூட்டுறவுப் பணியுடன் ஆலயத் திருப்பணிகளிலும் நாட்டம் கொண்டார். சாவகச்சேரி செருக்கல்பதி சித்திவிநாயகர் தேவஸ்தானத்தில் திருப்பணிகளைச் செய்யவென "செருக்கல்பதி சித்திவிநாயகர் இந்து அபிவிருத்தி மன்றம்" ஒன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்து அதன் பொருளாளர் பதவியையும் ஏற்றுக் கொண்டார்.

மழைகாலத்தில் கோயிலின் உள்வீதி வெள்ளத்தால் நிறையப் பெறுவது கண்டு அடியார்களின் பூரண ஒத்துழைப்புடன் உள்வீதியைச் சீரமைக்கும் பணிகளிலே ஈடுபட்டார் ஆலயத்துக்கான சித்திரத்தேர் ஒன்றையும் அமைக்க வேண்டிய முயற்சிகளையும் மேற்கொண்டார்.

### ப. நோ. கூ. சங்கத் தலைவரானார்

1998 ஆம் ஆண்டு பங்குனிமாதம் நடைபெற்ற ப. நோ. கூ. சங்கப் பொதுச் சபைத் தேர்தலின் மூலம் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தலைமைப் பொறுப்பை மிக்க மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டு தன்னால் இயன்ற வரை அல்லும் பகலும் சங்கப் பணியிலே தன்னைப் பூரணமாக ஈடுபடுத்திக் கொண்டார், ஓய்வு என்பதை மறந்தார். நேரகாலத்துக்கான தமது உணவை விடுத்தார். தன்னலம் துறந்தார், சங்கப்பணியாளர்களின் குறை நிறைகளை அறிந்தார், சங்க மிகை இலாபப் பணத்தில் பணியாளர்களுக்கு பங்கு கொடுத்தார். ஊக்குவித்தார். வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவேண்டும் என்ற எண்ணங்கொண்டார்.

பணியாளர்களின் நலனில் மட்டுமன்றி பாவனையாளர்களின் நலனிலும் அக்கறை காட்டினார். மக்கள் அத்தியாவசியப் பொருள்களைத் தட்டுப்பாடின்றிப் பெறவேண்டும் என்பதில் கண்ணுங் கருத்துமாக இருந்தார். மக்களின் நல்வாழ்விற்காக என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். எவ்வாறு செயற்படுத்த வேண்டும் என்பதையே சதா சிந்தித்து அதற்குரிய முயற்சிகளில் ஈடுபட்டு வந்தார்.

### பொருட்காட்சி

சங்க உதவியுடன் நடத்தப்பட்டு வரும் மகளிருக்கான கைப்பணிப் பயிற்சி நெறிகளையும் சிறப்புற நடைபெற வைத்து அதன் பெறுபேறாக அண்மையில் கைப்பணிப் பொருட் காட்சியொன்றையும் ஒழுங்கமைத்தார். அதில் மகளிர் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

கடந்த மாதம் சாவகச்சேரிககு வருகை தந்திருந்த பட்டினி ஒழிப்பு நிறுவனத்தினருடன் தொடர்பு கொண்டு இவ்வூரிலே அமையக்கூடிய தொழில் முயற்சிகள் பற்றிக் கலந்துரையாடினார். பழங்கள் பதனிடும் தொழில் அந்த நிறுவனத்துடன் ப நோ. கூ. சங்கம் இணைந்து செயற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்தார்.

அவரது மலர்ந்த முகம், வசீகரப் பேச்சு, விடாமுயற்சி காரணமாக அவர் எடுத்த இந்த முயற்சி கைகூடும் தறுவாயில் இருந்தது. தனது சாதனையையிட்டுப் பெருமையில் பூரித்தார் இராஜகுலசிங்கம். இம்முயற்சியைச் செயலாக்க வேண்டும் என்ற துடிப்புடன், அதே கருத்தோடு, முனைப்போடு செயற்பட்டார்.

இவ்வாறு ஓய்வு என்பதை ஒழித்துப் பொதுப் பணியிலேயே தன் வாழ்வை ஈடுபடுத்திக் கொண்ட இராஜகுலசிங்கம் கடந்த சில நாள்களாக அளவற்ற ஆனந்தம் மீதூரப் பெற்றிருந்தமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இந்நிலையில் —

அன்று (05 – 11 – 99) வெள்ளிக்கிழமை. வழமைபோல் குடும்பத்தினருடன் இராப்போசனம் அருந்தி விட்டு அன்றைய கடமைகளைப் பூரணமாக நிறைவேற்றிய திருப்தியுடன் மனப் பூரிப்புடன் — உறங்கச் சென்றார் இராஜகுலசிங்கம். அமைதியாகத் துயில் கொண்டார். அது ஆழ்ந்த துயிலானது. புன்னகை மாறாத அதே மலர்ந்த முகம்.

தன்னலம் கருதாத ஒரு சமூக சேவகனைத் தென்மராட்சி இழந்தது. சோகம் கொண்டது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டார்
என்று அமைதியும் ஆறுதலும் அடைவோமாக.

★

## நினைவலைகள்

★ புதுமை விரும்பியாகச் செயற்பட்டவர்

★ சங்கத்தில் நவீனமயப்படுத்தல் செய்தவர்
- [அ] தொலைபேசி
- [ஆ] பக்ஸ் [Fax] வசதி
- [இ] போட்டோ பிரதி இயந்திரம்
- [ஈ] பைக்கிங்மெகின் செயற்பாடு
- [உ] பழம் பாகு செய்ய நடவடிக்கை

★ கொள்கைப்பற்று விடாமுயற்சி உடையவர்

★ கூட்டுறவின் மூலம் மக்களுக்குச் சேவை செய்தவர்.

★ அஞ்சா நெஞ்சத்துடன் செயலாற்றியவர்

★ பணியாளருக்கு வேண்டிய உதவிகளைச் செய்தவர். பதவிகளை உறுதிப்படுத்தி நிரந்தரமாக்க உதவிய பெருந்தகை. கூட்டுறவுக் கல்விக்கு உரமூட்டியவர்.

★ கூட்டுறவே நாட்டுயர்வாகக் கொண்டு செயற்பட்டவர்.

கூட்டுறவாளர்கள்.

### கூட்டுறவாளர்களின் கண்ணீர்க் காணிக்கை

- தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ. சங்கம், கைதடி.
- சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கம், சாவகச்சேரி.
- தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம், கொடிகாமம்.
- சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ. சங்கம், சாவகச்சேரி.
- பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ. சங்கம், பளை.
- தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ. சங்கங்களின் கொத்தணி, சாவகச்சேரி.

(சி/9775)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### 38 லட்சம் ரூபா செலவில்

# பருத்தித்துறை துறைமுகத்தை புனரமைப்பதற்கு நடவடிக்கை

## ஒரேசமயத்தில் 5 லொறிகளில் பொருள் ஏற்றி இறக்க வசதி

யாழ்ப்பாணம், நவ. 10

ஒரே நேரத்தில் ஐந்து லொறிகளில் பொருள் ஏற்றி இறகக வசதியாக பருத்தித்துறை துறைமுகம் 38 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது,

வடமாகாண மீள்குடியமர்வு புனர்வாழ்வு அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள நிதியில் இருந்து இந்த வேலைகள் நடைபெற்று வருகின்றன.

ஒரே நேரத்தில் ஐந்து லொறிகளில் பொருள்கள் ஏற்றி இறக்க வசதியாக பாரிய இறங்குதுறை அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த இறங்குதுறை அமைக்கப்பட்ட பின்னர் பொருள் இறக்கும் பணிகள் துரிதமாக்கப்படுவதுடன் பொருள்ஏற்றி வரும் கப்பல்கள் பல மாதங்கள் இங்கு தரித்து நிற்க வேண்டிய நிலையும் ஏற்படாது என்று சுட்டிக்காட்டப்பட்டது.

1990 ஆம் ஆண்டு முதல் ஒரே நேரத்தில் இரு லொறிகளில் இருந்து மட்டும்பொருள்களை ஏற்றி இறக்க வசதி செய்யப்பட்டிருந்தது.

இதன்காரணமாக பொருள்களை ஏற்றிவரும் கப்பல்கள் வாரக்கணக்கில் இங்கு தங்க வேண்டிய நிலை நிலவியது.

(க-3)

# ஐ.தே.கவின் முதலாவதுகூட்டம் எதிர்வரும்17ஆம்திகதிகண்டியில்

கொழும்பு, நவ. 10

ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐ. தே. கவின் முதலாவது பிரசாரக் கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி கண்டி மத்திய சந்தையில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி ஐ. தே. க. சார்பில் ரணில் விக்கிரம சிங்க நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்த பின்னர் இந்தக் கூட்டம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐ.தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட பலர் இதில் கலந்து கொண்டு பேசுவர்.

(இ-க-3)

# காயமடைந்தோர் பாதுகாப்பு குறித்து செஞ்சிலுவை கவலை

கொழும்பு, நவ. 10

வன்னிப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களில் காயமடைந்தோரின் பாதுகாப்புக் காரணமாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கவலை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அது அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

கடந்த சில நாள்களில் இடம்பெற்ற மோதல்களில் பலர் உயிரிழந்ததுடன் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் —

சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை மதிக்குமாறு அரசாங்கப் படையினருக்கும் — விடுதலைப் புலிகளுக்கும் அறிவுறுத்த விரும்புவதாகவும் — செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது

மோதல்களின்போது மீண்டும் ஆயுதம் ஏந்த முடியாத வண்ணம் வலுவற்றுப்போனவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். எனவே காயமடைந்தவர்களை மனிதாபிமான அடிப்படையில் பாரபட்சமற்ற முறையிலும் பராமரிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-7)

# இன்று காங்கேசனுக்கு

யாழ்ப்பாணம், நவ. 10

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி எஸ் ஸ்ரீதரன் இன்று காங்கேசன்துறை தடுப்பு முகாமுக்கு விஜயம் செய்து அங்கு கைதிகளைப் பார்வையிடவுள்ளார்.

(இ-10)

# உள்ளூராட்சிச் சபைகளுக்கு ரூ. 7 கோடி உதவி கிடைக்கும்

2,000 ஆம் ஆண்டு பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடைத் திட்டத்தின் கீழ் வடக்கு—கிழக்கு மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ஏழு கோடி 20 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதி ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்துக்கும்ரூபா 10 லட்சம் வீதம் வழங்கப்படவுள்ளது.

கிராமிய மட்டத்தில் சிறுவர் பாடசாலை, வீதிகள், சனசமூக நிலையங்கள், குடிதண்ணீர்த்திட்டங்கள், உபகரணங்கள் கொள்வனவு மற்றும் புனர்வாழ்வு பணிகளுக்கு 5 லட்சம் ரூபாவும் —

பாடசாலைகள், சுகாதார நிலையங்கள் நூல் நிலையங்கள் மற்றும் பிற திட்டங்களுக்கு 5 லட்சம் ரூபாவும் — பிரமாண அடிபபடையில் வழங்கப்படவுள்ளன.

பிரதேச சபைத் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் பிரதேச சபை அலுவலர்கள், பிரதேச செயலர் ஆகியோரின் அங்கீகாரம் பெறப்பட்டு இந்த நிதி வழங்கப்படும்.

(இ-185)

# சான்றிதழ் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், நவ.10

மெதடிஸ்த திருச்சபையின் ''டைக்கோனியா'' தொழில்நுட்ப நிறுவனத்தில் பயின்ற மாணவ மாணவியர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று புதன்கிழமை மாலை 4. 00 மணிக்கு யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள பிரஸ்தாப நிறுவனத்தில் இடம்பெறும்.

மெதடிஸ்த திருச்சபை யாழ் சேகர முகாமைக்குருவும் யாழ். சென். பீற்றர்ஸ் ஆலய குருவான வருமான அருட்திரு கருணசேகரா தலைமையில் இடம்பெறும் இந்த வைபவத்தில் 'டைக்கோனியா' தொழில் நுட்ப நிறுவன நிறுவுநர்களும் கலந்து கொள்ள உள்ளனர்.

[இ]

# வன்னிஉணவு நெருக்கடியைத்தீர்க்க கப்பல்போக்குவரத்தைஏற்பாடுசெய்க!

## மன்னார் ஆயர் ஜனாதிபதிக்கு அவசர கோரிக்கை

மன்னார், நவ. 10

வன்னியில் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் நிலவும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாட்டை நீக்க மன்னாருக்கும் அந்தப் பிரதேசத்துக்கும் இடையில் கப்பல் போக்குவரத்து ஒன்றை ஏற்பாடு செய்ய வேண்டும்.

மன்னார் ஆயர் அதிவந். இராயப்புயோசப் மேற்கண்ட அவசர கோரிக்கையை ஜனாதிபதியிடம் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக ஆயர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த முதலாம் திகதியில் இருந்து இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் எடுத்துச் செல்லப்படவில்லை. இதனால் அங்கு ஏற்பட்டுள்ள பெரும் உணவுத் தட்டுப்பாட்டால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் மேலதிக சிகிச்சை பெறவேண்டிய பல நோயாளர்கள் வெளியிடங்களுக்குச் செல்ல முடியாது அவதிப்படுகின்றார்கள்.

இந்த நிலைக்கு தீர்வு காணும் வகையில் அந்தப் பிரதேசத்துக்கும் மன்னாருக்கும் இடையில் கப்பல் சேவை ஒன்றை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும் — என்றுள்ளது.

(இ-க-3)

# மானிப்பாய்ப் பிரதேசத்தில் 100 பேருக்குக் கண்ணாடி

வலி. தென்மேற்கு, நவ. 10

மானிப்பாய் கோவில்பற்று லயன்ஸ் கழகம் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் 100 பேருக்கு கண் பரிசோதனை செய்து கண்ணாடி வழங்கியுள்ளதாக 'லயன்ஸ் செயற்திட்டத் தலைவர் சி. கேசவராஜன் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை, சாவற்காடுசுகாதாரநிலையம் ஆகியன ஊடாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கே கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

(இ-185)

## வாசகர் திருமுகம்

# நல்லூர்ச் சந்தையைப் புனரமைக்க முடியாதா?

'' உதயன் '' நாளாந்த இதழுடன் இணைந்து கிடைக்கப்பெற்ற UNOPS செயற்றிறன் அறிக்கையின் செப்ரெம்பர் மாதஇதழைப் படித்தேன். மிக்க மகிழ்ச்சி. குறித்த நிறுவனம் என்ன செய்தது, என்ன செய்கின்றது என்பதை அறிய முடிந்ததையிட்டு நன்றி.

குறித்த செயற்றிறன் அறிக்கையின்6ஆம்பக்கத்தில் சந்தைகள் புனரமைப்பு பற்றிய செய்திகளை வாசிக்கும் பொழுது ஒரு பக்கம் நிறைவும் இன்னொரு பக்கம் குறைவும் தென்படுகின்றது. சந்தைகள் புனரமைப்புக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தைகளில் '' நல்லூர்ச் சந்தை'' ஏன் தேர்ந்தெடுக்கப்படவில்லை? என்பதை நினைக்கும்போது நிறைவுடன் இருக்க முடியவில்லை. இது எனக்கு மாத்திரம் ஏற்பட்டதொன்றல்ல. இப்பகுதிவாழ் அனைத்து மக்களுக்கும் ஏற்பட்ட மனக் கவலையே.

நல்லூர்ச் சந்தை யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள ஒரு பிரபல்யமான சந்தை என்பது யாவரும் அறிந்ததே. சுமார் மூன்றரை லட்சம் ரூபாவுக்கு மேல் வருடந்தோறும் மாநகரசபைக்குக் குத்தகையாகக் கிடைக்கின்றது. இதைப் புனரமைக்கவோ அல்லது நவீனமயப்படுத்தவோ கடந்த காலங்களில் பதவி வகித்த முதல்வர்களோ, ஆணையாளர்களோ முயற்சி எடுக்கவில்லை. சங்கிலியன் காலத்துக் கட்டடம் — அந்தப் பெருமையை நிலைநாட்டிப் பேண நினைக்கின்றார்களோ என்னவோ... !

ஆகவே விட்ட குறையை நீக்கவிடாது. யாழ் மாநகர சபையினரும், UNOPS நிறுவனத்தினரும் இணைந்து மேற்படி சந்தையை எதிர்காலத்தில் புனரமைப்புச் செய்து நவீன மயப்படுத்துவார்களாக.

நாயன்மார்கட்டு. சி. க. துரைசிங்கம்

# மருத்துவபீட மாணவர்களின் பெற்றோரின் கவனத்துக்கு

யாழ் மருத்துவபீட மாணவர்கள் தமது 5 வருட உயர்கல்வியைப் பூர்த்தி செய்வதற்கு இங்குபோதுமான துறைசார் வல்லுநர்கள் கடமையாற்ற முன்வராமையினால் 7 வருடங்களுக்குக் குறையாத காலத்தை விரயம் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளமை எல்லோருக்கும் தெரிந்ததே.

அரசாங்கத்தின் புதிய தனியார் மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கான அனுமதி வெளிநாடுகளில் மருத்துவக் கல்வி பெற்றுத் திரும்புவோரை உள்வாங்கல், மேற்குறிப்பிட்ட கால விரயம் என்பவற்றினால் எதிர்வரும் ஆண்டுகளில் எமது மருத்துவப் பட்டதாரிகள் வேலைவாய்ப்பு இன்மை போன்ற நிலைமைகளை எதிர்நோக்க நேரிடலாம்

இத்தகைய காலகட்டத்தில் சுகாதார அமைச்சு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் (UGC) ஊடாகப் பொதுஉளச்சார்புப் பரீட்சை (Common MCQ) நடத்தும் திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது இதன் பாதிப்புத் தொடர்பாக ஸ்ரீலங்காவின் ஏனைய மருத்துவபீட மாணவர்களின் பெற்றோர்கள் தமக்கென அமைப்பினை ஏற்படுத்தி, களத்தில் இறங்கி, கண்டன ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், அறிக்கைகள், மகஜர்கள் மூலம் பொது ஊடகங்கள் வாயிலாகக் குரல்கொடுத்து அரசாங்கத்துக்கு நெருக்குவாரம் கொடுக்கின்றனர். இந்த வேளையில் சுமார் 650 மாணவர்கள் வரை உயர் கல்வி பெறும் எமது ஒரேயொரு மருத்துவபீடத்தின் சார்பில் நாம் எந்த ஓர் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்காமல் வாளாவிருப்பது விசனத்துக்குரிய ஒன்றாகும்.

மேலும் போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்பவெனப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் யாழ். மருத்துவபீடத்திற்கெனப் பிரத்தியேகமாக வழங்கப்பட்டுள்ள வேதன அதிகரிப்புச் சலுகையைப் பூரணமாகப் பயன்படுத்தி, தெற்கில் உள்ள துறைசார் வல்லுநர்களை உள்வாங்கவும் மற்றும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வதியும் வைத்திய கலாநிதிகளைக் குறுகிய கால ஒப்பந்த அடிப்படையிலேனும் வரவழைத்து எமது மருத்துவபீட மாணவர்களின் உயர்கல்வியைத் தடைகள் இன்றி, ஏனைய மருத்துவபீட மாணவர்களுடன் சமாந்தரமாக உரிய காலத்தில் (5 வருடங்களில்) கற்று முடிக்க உதவுவதும் சம்பந்தப்பட்ட எல்லோரதும் கடமையாகும். பொதுமக்களும் தமது ஒத்துழைப்பை வழங்கவேண்டியது அவர்களது தலையாய கடமை இன்றைய மருத்துவபீட மாணவர்கள்தான் எமது நாளைய உயிர்காக்கும் காவலர்கள் என்பதை நாம் மறக்கலாமா?

எமது மண்ணில் சொல்லொணாத் துயர்களுக்கும் சவால்களுக்கும் மத்தியில் அரும்பணியாற்றி வரும் எமது வைத்திய கலாநிதிகளையும், எமது பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டினைக் குறிக்கோளாகக் கொண்டு தமது சுக துக்கங்களைப் பொருட்படுத்தாது இங்கு வந்து தம்மாலான அனைத்தையும் செய்யும் புலம்பெயர்ந்து திரும்பிய துறைசார் வல்லுநர்களையும் மனதாரப் பாராட்டுவதிலும் அவர்தம் ஆக்கபூர்வமான செயற்பாடுகளைக் கௌரவிப்பதும் சமகாலத்தில் நாம் செய்யவேண்டிய கடமையல்லவா?

உளச்சார்புப் பரீட்சை விவகாரம், யாழ். மருத்துவபீடச் செயற்பாடுகளை மேம்படுத்துவது ஆகியவற்றில் உடன் கவனம் செலுத்தப்பட வேண்டும். யாழ். மருத்துவபீட மாணவர்களின் பெற்றோர்களுக்கும் மற்றும் இப்பிரதேசம் வாழ் மக்களுக்கும் இது ஒரு பணிவன்பான வேண்டுகோள்.

இருபாலை கிழக்கு அ. இரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## O/L MATHS 99

தற்போதைய திட்டத்திற்கமைய கணித பாடத்தின் இரு சோதனைகளுக்குமுரிய பகுதி I பகுதி II ஆகியவற்றிற்குரிய சகல அலகுகளையும் ஆரம்ப அறிவிலிருந்து 20 நாட்களில் தொடர்40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடைய கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன், 10, கச்சேரிகிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (70823)

## விற்பனைக்கு

வீட்டு த்தளபாடங்களும், மின்சாரப் பாவனைப் பொருள்களும் வைத்திய சாலை உபகரணங்களும் மற்றும் எவர் சில்வர் பொருள்களும் ஒவன் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. தினமும் பார்வையிடலாம். தெரிவுகளுக்கு முந்திக் கொள்ள தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: இல. 216, இலுப்பையடிச் சந்தி, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (70827)

சாவகச்சேரி, நுணாவில் கல்வயல் வீதியிலுள்ள 23 பரப்புத் தென்னங்காணி, வீடு, கராஜ் உடன் சகல வசதிகளும் கூடியது. காணி பிரித்தும் கொடுக்கப்படும். மற்றும் கனகம் புளியடி சந்தியிலிருந்து புத்தூர் வீதியில் 100 யார் தூரத்தில் $10\frac{1}{4}$ பரப்புக்காணி வீட்டுடன கூடியதும் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சு. சண்முகநாதன், நுணாவில் கல்வயல் வீதி, சாவகச்சேரி. [70592]

## காணிவிற்பனை

கோயில் வீதி — பிரதான வீதி. — கண்டிவீதி - ஆஸ்பத்திரி வீதி, என்பனவற்றுக்கு மத்தியில் அமைந்துள்ள 1 பரப்பு [குளி- 17-25] கிணற்றுடன் கூடிய சதுரக் காணி (468/1 St John's Churh Lane) விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு 28/1 சோமசுந்தரம்ஒழுங்கை, சுண்டுக்குளி, T. P NO 2379. [70811]

## தவறிவிட்டது

வட்டு கிழக்கு சித்தன் கேணியைச் சேர்ந்த கனகரத்தினம் இதயகுமாரன் ஆகிய எனது விசேட அடையாள அட்டை (090402184) மூளாய் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஸ்ரீமுருகன் அரிசி ஆலை, மூளாய் வீதி, வட்டுக்கோட்டை என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (70822)

கந்தசாமி மாலினி என்பவரது விசேட அ. அட்டை (0902012489), தேசிய அ. அட்டை (766293004V) என்பன 06-11-99 அன்று யாழ் நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அம்பாள் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலில் அல்லது சிவராதா புடைவை மாளிகையில் ஒப்படைத்துதவவும். (70829)

## தவறிவிட்டது

ஜனனி சோதிநாதன் என்பவருடைய தேசிய, விஷேட [808380323V, 0902019840] அடையாள அட்டைகள் பேர்சுடன் யாழ். நவீன சந்தைப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிகளில் கொடுத்துதவுமாறு வேண்டுகிறோம். 80, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு, சந்தை அலுவலகம். மாநகராட்சி மன்றம். (சன்மானம் வழங்கப்படும்.) (70818)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1963, மிருகசீரிடம் (4 ஆம் பாதம்) செவ்வாய் குற்றமற்ற கனடாவில் பிரஜா உரிமைபெற்ற (Computer Programmer) நிரந்தர தொழில் புரியும் அழகிய மணமகனுக்கு படித்த சிறந்த நற்குண முள்ள அழகிய மணமகள் தேவை உடன் படத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு விள/இல. 967, மே/பா உதயன் (70712)

## SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலம் பயில, ஒரு வகுப்பில் 10 மாணவர்கள் மட்டும், தனித்தனி கவனம், குறுகிய காலத்தில் கதைக்க. ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி 426, 302), காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (70799)

## கடை வாடகைக்கு

கஸ்தூரியார் வீதி, புனிதா ஜுவல்லர்ஸ் முன்பாக கடையும் உட்புறமாக இரண்டு அறை கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தொடர்பு: இல. 49, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (70813)

# டாசன் தொலைத் தொடர்பகம்



தங்கவாசம், துன்னாலை தெற்கு, கரவெட்டி

இரவு பகல் சேவை (24 மணித்தியாலம்)

- உள்நாட்டுத் தொலைபேசி இல: 070 – 212591
- வெளிநாட்டுத் தொலைபேசி இல: 0094 – 70212591

அழைப்புகள் உடனுக்குடன் பரிமாறப்படும்.

இன்று (10 – 11 – 1999) புதன்கிழமை காலை 11. 00 மணிக்கு சுபவேளையில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளது,

நன்றி

உரிமையாளர்
சி. சண்முகடாஸ் (J.P)

(70825)

# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## இராமலிங்கம் இராஜகுலசிங்கம்

(தலைவர், சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்)

சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கத் தலைவர் திரு. இ. இராஜகுலசிங்கம் அவர்களின் திடீர் மறைவு கேட்டு அதிர்ச்சியும் ஆறாத் துயரும் அடைந்தோம். அவரது பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்

பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ. சங்கம்.
பளை.

(சி/ 9772)

# வாழ்த்துகின்றோம்

மட்டுவில் வடக்கு

## கமலாசனி வித்தியாலயம்

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் – 1999 பரீட்சையில் சித்தி பெற்ற மாணவிகளான

- கணேஸ்வரன் சுஜித்தா 131 புள்ளி
- ஜெயானந்தன் தாட்சாயினி 141 புள்ளி

ஆகியோரையும் இவர்களை வழி நடத்தி அயராது ஊக்கமளித்த வித்தியாலய அதிபரையும், ஆண்டு 5 இன் ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

திரு திருமதி கணேஸ்வரன்
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

(சி/9773)

# வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி

# கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் அரச திணைக்களங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களிடம் இருந்து கோரப்படுகின்றன. கேள்விகள் எதிர்வரும் 16 – 11 – 99 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இக்கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் அன்றைய தினமே பிற்பகல் 2-00 மணிக்குத் திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு. மூலப்பிரதியை 'தவிசாளர், வலி. கிழக்கு பிரதேச சபை. நீர்வேலி' என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கும் எதிர்வரும் 16 – 11 – 99 ஆந் திகதி நண்பகல் 12–00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ, பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

| | வேலையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|
| 01. | வெள்ளெருவப் பிள்ளையார் ச. ச. நிலைய மலசலகூடம் அமைத்தல் | 500/- | 150/- |
| 02. | நாவலர் ச. ச. நிலையம் திருத்தம் | 500/- | 150/- |
| 03. | இந்திரன் ச. ச. நிலையம் திருத்தம் | 500/- | 150/- |
| 04. | கலைக்கதிர் வீதி திருத்தம் | 1,000/- | 250/- |
| 05. | பொக்கணை வீதி திருத்தம் | 1,000/- | 200/- |
| 06. | செல்வா வீதி திருத்தம் | 1,000/- | 200/- |
| 07. | வளர்மதி ச. ச. நிலைய வீதி திருத்தம் | 1,000/- | 200/- |
| 08. | பன்னாலை வீதி, திருத்தம் | 500/- | 150/- |
| 09. | கிழுவானை ஒழுங்கை திருத்தம் | 500/- | 150/- |
| 10. | தொகுதிப்பண்ணை வீதி திருத்தம் | 500/- | 150/- |
| 11. | விநாயகர் வீதி திருத்தம் | 500/- | 150/- |
| 12. | மாணிக்கர் றோட் மதகு திருத்தம் | 1,000/- | 200/- |
| 13. | பத்தாவத்தை மாலைவைரவர் வீதி திருத்தம் | 1,000/- | 250/- |

மேற்குறிப்பிட்ட வைப்புப் பணத்தையும் கேள்விப் படிவக் கட்டணங்களையும் செலுத்துவதன் பேரில் 15-11-99 ஆம் திகதி பிற்பகல் 12-30 மணி வரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல்வேண்டும். கேள்விப்படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. இது சம்பந்தமான மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

பூ. [illegible]
தவிசாளர்

வலி கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.

(சி/9771)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 25 | 11 |
| — | — |
| 04 | 11 |
| — | — |
| 1929 | 1996 |

## எட்வேட் இரரசரெத்தினம் ஆசீர்வாதம்

[இளைப்பாறிய உப அதிபர், நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தியாலயம்]

''உயிர்ப்பும் உயிரும் நானே'' என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்''

ஆண்டு மூன்று கழிந்தாலும் அப்பா!
உம் நினைவு எம்மை விட்டகலாது.

உம் ஆன்மா சாந்திபெற இறைவனடி இறைஞ்சுகின்றோம்.

இவரது ஆன்ம இளைப்பாற்றுக்காக 11 – 11 – 1999 காலை 6. 30 மணிக்கு அருள் ஆச்சிரமத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் வாடும்
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், மைத்துனர், பெறாமக்கள்.

திருமதி M. J. ஆசீர்வாதம்,
41, இராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/9769)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தை இந்தக்கட்டத்திலாவது நிறுத்த அரசு முன்வர வேண்டும்

## ரத்வத்தையிடம் கோரியுள்ளார் ஐ. தே. க. உறுப்பினர்

கொழும்பு, நவ. 10

''வன்னியில் தற்போதுள்ள நிலையிலாவது யுத்தத்தை நிறுத்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த முன்வர வேண்டும்'' என்று ஐ தே.க. நியமன நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தனா கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது;-

வன்னியில் படையினர் சந்தித்த பேரிழப்பு போதுமானது. அரசியல் நோக்கத்துக்காக இந்த யுத்தத்தை இந்தக் கட்டத்திலாவது நிறுத்தி இளம் உயிர்கள் இழக்கப்படுவதைத் தடுக்க வேண்டும்.

கடந்த நான்கு வருடங்களுக்கு முன்பு இருந்த நிலை இன்று வன்னியில் ஏற்பட்டுள்ளது. மேலும் இழப்புக்களைச் சந்திக்காமல் இந்தக்கட்டத்திலாவது இந்தயுத்தத்தை நிறுத்த முன்வாருங்கள்

யுத்த முனையில் உயிரிழந்த 407 படையினரின் சடலங்களை செஞ்சிலுவைக் சர்வதேசக்குழு மூலம் ஒப்படைக்க விடுதலைப் புலிகள் முன்வந்தனர்.

ஆனால் அவற்றைப் பொறுப்பேற்க அரசாங்கம் முன்வரவில்லை. ஆனாலும் விடுதலைப்புலிகள் இராணுவ மரியாதையுடன் அவற்றைந் தகனக் செய்துள்ளனர்.

இந்தக் கட்டத்திலாவது யுத்தத்தை நிறுத்திவிடுதலைப் புலிகளுடன் பேச்சுகளை ஆரம்பிக்க வேண்டும் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சரிடம் கோருகின்றேன் - என்றுள்ளது. (இ-க-3)

## உலக உயிர்ப் பாதுகாப்பு வாரம்

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை வருடம் தோறும் கந்தஷஷ்டி வாரத்தை முன்னிட்டு அனுஷ்டித்து வரும் 'உலக உயிர் பாதுகாப்பு வாரம்' கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ளது. இவ்வாரம் எதிர் வரும் 14 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது [க-30]

## கந்தஷஷ்டி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ 10

யாழ். வண்ணை கதிர் வேலாயுதஸ்வாமி ஆலயத்தில் கந்த ஷஷ்டி விரத காலத்தில் தினமும் கந்த ஷஷ்டி பற்றிய டாக்டர் க. நவரத்தினத்தின் விரிவுரையும் — பிற்பகல் 4. 15 மணி முதல் 'முருகன் பெருமை' எனும் தலைப்பில் பிரம்மஸ்ரீ சிவ ராஜசர்மாவின் சொற்பொழிவும் இடம்பெறுகின்றன.

★ ★ ★

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் கந்த ஷஷ்டி காலச் சொற்பொழிவுத் தொடரில் இன்று பிற்பகல் 3. 30 மணியளவில் ''சித்தம் அழகியார்' எனும் தலைப்பில் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் உரையாற்றுவார். (க)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ 10

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரை மண்டபத்தில் இன்று புதன் கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு கருத்தரங்கு ஒன்று யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறும்.

'தொன்மங்களும் தமிழ் இலக்கிய மரபும்' என்ற தலைப்பில் பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணியன் கருத்துரை வழங்குவார்.

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 10

நுண்கலைமாணிசித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறி அனுமதிக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமைகாலை 9 மணிக்கு பல்கலைக் கழக சுபா மண்டபத்தில் நடைபெறும்.

இந்தநேர்முகப்பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பட்டியல் பல்கலைக் கழக விளம்பரப் பலகையில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. (க)

## கூடைப்பந்தாட்டம்

யாழ் ஹற்றன் நஷனல் வங்கியின் அனுசரணையுடன் யாழ். மாவட்டப் பாடசாலைகள் மற்றும் கழகங்களுக்கு இடையில் நடைபெற்றுவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று யாழ் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் இடம்பெற உள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணி விவரம் வருமாறு:

★ ஹாட்லிக்கல்லூரி அணி எதிர் யாழ். மத்திய கல்லூரி 'பி' அணி.

★ பற்றீஷியன்'கோல்ட்ஸ்' அணி எதிர் யாழ் பல்கலைக் கழக 'ப்ளூஸ்' அணி.

## கரபந்தாட்டம்

அரியாலை மத்தி இளைஞர் கழகத்தின் 2 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கரபந்தாட்ட (கெட்-அப்) சுற்றுப்போட்டியில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில்இன்று இடம் பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் மத்தி வி. க அணியும் ஆவரங்கால் இளைஞர் 'ஏ' அணியும் மோதுகின்றன. (ஐ-3)

## உதைபந்தாட்டம்

சென். ஜோன்ஸ் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டிக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்றுயாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ மாலை 4 மணிக்கு — கிறீன் கிங்ஸ் வி. க. எதிர் சென். மைக்கல்ஸ்.

★ மாலை 5 15 மணிக்கு —பாரதி வி. க. எதிர் சென். மேரிஸ் வி. க. (ஐ-8)

## ஆஸ்திரேலியா வெற்றி

ஆஸ்திரேலியா — பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் ஆஸ்திரேலியாவில் கடந்த 5 ஆம் திகதி தொடக்கம் நேற்று வரை நடைபெற்று வந்த முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 10 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.

பாகிஸ்கான் அணி முதல் இன்னிங்ஸில் 367 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 281 ஓட்டங்களையும் பெற்றது.

ஆஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 575 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் விக்கெட் இழப்பு எதுவும் இன்றி வெற்றிககுத் தேவையான 74 ஓட்டங்களையும் பெற்றது.

இந்த முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் ஆட்ட நாயகனாக ஆஸ்திரேலிய அணியின் சிறந்த துடுப்பாட்ட வீரர் மைக்கல் ஸ்லேற்றர் தெரிவு செய்யப்பட்டார்.

## மென்பந்து கிரிக்கெட்

யாழ்ப்பாணம், நவ. 10

அரியாலை மத்தி விளையாட்டுக் கழகம் தனது இரண்டாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெற உள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

★ பிற்பகல் 3 மணிக்கு — நொதேண் வி. க. 'ஏ' அணி எதிர் கொட்டடி வி.க. ''பி'' அணி

★ மாலை 4.30 மணிக்கு— எஸவிண் கொயின்ட்ஸ் அணி எதிர் ஜோன் ப்ளேயர்ஸ் வி. க. அணி. (ஐ-8)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி

தெய்வயானியின்

அன்புத் தாயார்

**திருமதி தையல்நாயகி தயானந்தன்**

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

2 ஆம் வருட நடனத்துறை மாணவர்கள்
இராமநாதன் நுண்கலைப்பீடம்;
யாழ். பல்கலைக்கழகம்.

(70853)

## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தில்
பொறியியலாளராகக் கடமையாற்றும்
எந்திரி. ஆ. தயானந்தன் அவர்களின் துணைவி

**திருமதி தையல்நாயகி தயானந்தன்**

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம். அத்துடன் அன்னாரின் ஆத்மாசாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதம பொறியிலாளர்,
நிறைவேற்றுப் பொறியியலாளரும்
அலுவலர்களும்.
கட்டடங்கள் திணைக்களம்
(மாகாணம்)

கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(70849)

## மரண அறிவித்தல்

**கதிரித்தம்பி இராஜரெட்ணம்**

(இளைப்பாறிய தபால் அதிபர்)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கிருலப்பனையை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய தபால் அதிபர் கதிரித்தம்பி இராஜரட்ணம் 9-11-99 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் கதிரித்தம்பி சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற சிதம்பர உடையார் மற்றும் செல்வலக்சுமிஅம்மா, தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற நாகரெட்ணம் (C. T B.) அவர்களின் அன்புச்சகோதரனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் வைத்திய கலாநிதி பவானந்தன் (U K), ஜெயபவானி (ஆசிரியை, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் வைத்திய கலாநிதி சிவகுமாரி (L. R. H., கொழும்பு) அவர்களின் அன்பு மாமனாரும் கோபிகாவின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-11-99) புதன்கிழமை பி. ப. 3 மணியளவில் 35/1 எட்மன்டன் வீதி, கிருலப்பனை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாலை 5 மணியளவில் கனத்தை இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கே. சிவம்
(I.P.T.)

ஸ்ரீலங்கா ரெலிகொம்.
யாழ்ப்பாணம்.

(70848)

## தேவை

தொலைபேசி இயக்குநர்

(பெண்)

தொலைபேசி இயக்குவதில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

WORLD LINK AGENCY
POST OFFICE
52, DUTCH ROAD,
CHAVAHACHCHERI.

வேல்ட்லிங் முகவர் தபால் நிலையம்

52, டச்சு வீதி,
சாவகச்சேரி.

(சி/9779)

ஓம்
விராட் விஸ்வப்பிரமணே நம

## புதுக்கடை திறப்பு விழா



நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம்
ஐப்பசி 24 ஆம் நாள் 10-11-1999 புதன்கிழமை
காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரையுள்ள
சுபவேளையில்

## சிறிலஷ்மி நகை மாளிகை
## SRI LUXMI JEWELLERY

எனும் ஸ்தாபனத்தை ஆரம்பிக்கவிருப்பதால் அத்தருணம் அன்பர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

அன்புடன்
ம. சண்முகராஜா
(ராஜா)

9/1, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி (சந்தி),
யாழ்ப்பாணம்.

(70855)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய ஓடியோ
CD முழக்கம்
:: ஹலோ
:: உயிரில்
கலந்தது
மூர்த்தி
வீடியோ சென்ரர்
மானிப்பாய்
(சி/9778)

### குண்டு..

(முதலாம் பக்கத் தொடர்)

குருநாகல் பொலீஸார் சந்தேகத்தின் பேரில் 8 பேரைக் கைது செய்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது. (ஐ-7)

### மணலாறில்...

(முதலாம் பக்கத் தொடர்)

இடம் பெயர்ந்த மக்கள் தமது இருப்பிடங்களுக்கு திரும்பி உள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்று மாலை அறிவித்தது. (ஐ-க-3-6)

மானிப்பாய்
இந்துக் கல்லூரியின்
அரிய சாதனை
16, 18 வயது
வலிகாம கல்வி வலய
உதைபந்தாட்ட சம்பியன்கள்
★ 14 வயதுப் பிரிவு கோட்ட மட்ட சம்பியன்கள்
★ 2001 ஆம் ஆண்டு கல்விக் கண்காட்சியில் 1 ஆம், 3 ஆம் இடங்கள். ஏனைய இரு இடங்களுக்கு மாவட்ட மட்டத்துக்குத் தெரிவு.
S.I.A.S நிறுவனம்
மீண்டும் கல்லூரியின் பழம்பெரும் புகழை நிலைநாட்டிய உதைபந்தாட்ட வீரர்களையும் அதிபர், ஆசிரியர்களையும் பெற்றோரையும் பழைய மாணவர்களையும்
வாழ்த்துகிறோம்
B.Com. Management பட்டதாரிகள்
6 மாதங்கள் C.I.M.A Stage II படித்து
ACCOUNTANT ஆகலாம்.
வகுப்புகள் 14-11-1999 ஆரம்பம்
358, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(70840)

B. A. PART I
யாழ். பேராதனை (வெளிவாரி)
விரிவுரைகள் ஆரம்பம் 13-11-99 9 மணி
B. A. Final
(பேராதனை)
விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.
1ST in Com. G.A.Q. 200)
புதிய பிரிவு 2001
விரிவுரைகள் ஆரம்பமாகியுள்ளன.
★ இதற்குரிய பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.
★ விண்ணப்பப்படிவம் விவரங்களை நேரிலே பெற்றுக் கொள்ளவும்.
விவரங்களுக்கு S அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி - யாழ். (70845)

### 4 நகரங்களை...

(முதலாம் பக்கத் தொடர்)

விடுதலைப் புலிகள் தரப்பில் 150 க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவர்களில் 120 உறுப்பினர்களின் விவரங்களை விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இந்த மோதல்களில் விடுதலைப் புலிகள் தரப்பில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை மிக அதிகம்.

அரச தரப்பு இழப்புக்களை மிகைப்படுத்திச் சில தொடர்புச் சாதனங்கள் கூறுகின்றன. அப்படி வெளியிடுவதையிட்டு நான் கவலை அடைகிறேன்.

வன்னியில் நிலைகொண்டுள்ள சகல பிரிவு வீரர்களும் தத்தமது படையணிகளுடன் இணைந்துள்ளனர். தமது நடவடிக்கைகளையும் அவர்கள் மீளமைத்திருக்கிறார்கள் — என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்தச் சண்டையைத் தாம் கூர்மையாக அவதானித்ததாகவும் —

அதைத் தொடர்ந்து படையணித் தளபதிகளை மாற்றுவதற்கு உத்தரவு பிறப்பித்ததாகவும் —

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த விசாரணை மன்றம் ஒன்றை அமைத்துள்ளதாகவும் —

ஜனாதிபதி அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தில் உயிரிழந்த, காயமடைந்த படையினர் விவரம் அடங்கிய பட்டியல் ஒன்றையும் ஜனாதிபதி வெளியிட்டுள்ளார்.

அந்தப் பட்டியலின்படி சம்பவ இடமும் இறந்த, காயமடைந்த படையினரின் எண்ணிக்கை விவரமும் முறையே வருமாறு:-

★ ஒட்டுசுட்டான், நெடுங்கேணி:- இறப்பு - 36, காயம் - 601

★ கஜபாபுர வடக்கு:- இறப்பு - 12, காயம் - 44

★ அம்பகாமம்:- இறப்பு - 41

★ புளியங்குளம் வடக்கு:- இறப்பு - 7, காயம் - 49

★ புளியங்குளம்:- காயம் - 19

★ கஜபாபுர:- இறப்பு - 5 காயம் - 30 (ஐ-க-3-6)

வீடியோ
CD வெளியீடு
விக்னேஷ் நடித்த
புதுக்குடித்தனம்
கண்மணி உனக்காக
சிவலீலை
அடுத்த வெளியீடு
பிரசாந் நடித்த
ஹலோ
திரையரங்குகளிற்கு
முன்னுரிமை
பிரதிகள் 12-00 மணிக்குப் பின்பு பெற்றுக்கொள்ளலாம்
விஸ்ணு வீடியோ
K. K. S. றோட்,
கோண்டாவில் மேற்கு.
(70862)

## தொண்டமானின் பேரன் அமைச்சராகிறார்

இ. தொ. கா. நாடாளுமன்ற உறுப்பினர் ஆறுமுகம் தொண்டமான் ஜனாதிபதி முன்னிலையில் இன்று அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்யவிருக்கின்றார்.

அமைச்சர் தொண்டமான் வகித்த அதே அமைச்சையே இவர் பொறுப்பேற்க இருக்கின்றார். (ஐ-3)

### யாழ்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

தப் போராட்டம் ஒன்றை நடத்தப் போவதாக அறிவித்துள்ளனர்.

கொழும்பில் மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சர் அலவி மௌலானாவின் தலைமை அலுவலகத்துக்கு முன்னால் இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

பிரதிமேயர் என். ரவிராஜ், மாநகர சபை உறுப்பினர்களான எஸ். எஸ். கணேந்திரன், என். அரவிந்தன், தங்க. முகுந்தன் ஆகியோர் உண்ணாவிரதப்போராட்டத்தில் பங்குகொள்வர். இவர்களுடன் கூட்டணியின் ஆதரவாளர்களும் இந்த உண்ணாவிரதத்தில் கலந்துகொள்வர்.

வீதிகள் மற்றும் கழிவு வாய்க்கால்களைத் திருத்துவதற்கு உரிய நிதியுதவிகள் வழங்கப்படுவதில்லை எனவும் —

அண்மையில் மறைந்த இரண்டு மேயர்களுக்கான நஷ்டஈடு வழங்கப்படவில்லை எனவும் — அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மாநகர சபைக்கு ஒரு வாகனம் கூட வழங்கப்படாத நிலையில் ஈ.பி.டி.பியின் பொறுப்பில் உள்ள பிரதேச சபைகளுக்கு 7 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (ஐ-7)

### தொண்டாவின்..

(முதலாம் பக்கத் தொடர்)

நாடாளுமன்ற உறுப்பினரும், அவரின் பேரனுமான ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான குழு இந்த அஸ்தியை அங்கு எடுத்துச் சென்று கங்கையில் கலப்பர்.

1948 ஆம் ஆண்டு காந்தியடிகளின் அஸ்தி இதே இடத்தில் கங்கையில் கலக்கப்பட்டது. (ஐ-க-3)

### கஜபாபுர....

(முதலாம் பக்கத் தொடர்)

தாக்குதலை நடத்தி வருகின்றனர் என்றும்—

அந்த தாக்குதலைப் படையினர் பதில் தாக்குதல்நடத்தி முறியடித்து வருகின்றனர்என்றும்—

படையினர் உரிய தற்பாதுகாப்பு நிலைகளை ஏற்படுத்தியுள்ளனர் என்றும்—

படையினர் தமது நிலைகளுக்குள் புலிகள் ஊடுருவுவதைத் தடுத்து வருகின்றனர் என்றும்—

பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

மன்னார் மாவட்டத்தில் பள்ளமடுவுக்குத் தென் கிழக்குப் பகுதியிலும், நட்டாங்கண்டல் பகுதியிலும் அமைந்துள்ள படையினரின் நிலைகள் மீதும் விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதலை நடத்தி வருகின்றனர் என்றும்—

படையினர் பதிலுக்கு மோட்டார், ஆட்லறி தாக்குதலை நடத்தி புலிகளின் தாக்குதலை முறியடித்துவருகின்றனர் என்றும்— மேலும் தெரிவிக்கப்பட்டது

வவுனியா மாவட்டத்தில் புளியங் குளத்துக்கு அருகேயும் விடுதலைப் புலிகளின் தாக்குதலை முறியடித்து உரிய பாதுகாப்பு நிலைகளை படையினர் ஏற்படுத்தி வருகின்றனர் என்றும் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் வெளியிட்ட அறிக்கைகள் இரண்டிலும் தெரிவித்தது.

### இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்)

யில் இந்தச் சபை தேவையற்ற ஒன்று என்றும் —

கூட்டணிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பாகச் சட்ட ஆலோசனை பெறப்படுகின்றது என்றும் —

பெரும்பாலும் வார இறுதியில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்படுமென்றும் — அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-3)

### தாண்டிக்குளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்)

தேசத்தை மட்டும் தான்.

போர்முனையில் படையினர் கொல்லப்பட்ட வண்ணம் உள்ளனர். ஆனால் முப்படைகளின் தளபதியான ஜனாதிபதி தமது வாசஸ்தனத்தில் பால்சோறு பகிர்ந்து கொண்டாட்டம் வைக்கிறார்.

பெரும் பிரதேசங்களைக் கைப்பற்றிய விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் கூட இப்படி சந்தோஷம் கொண்டாடமாட்டார் — என்று ரணில் அங்கு தெரிவித்தார். (ஐ-3)

### வன்னி...

(முதலாம் பக்கத் தொடர்)

கள் தங்களிடம் கோரி வருகின்றனர் என்றும் — அவர்களுக்கு தற்போதைய நிலை குறித்து தெரிவிக்க வசதியாக தமக்கு விவரங்களைத் தருமாறும்—

அந்த உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

தற்சமயம் செய்தித் தணிக்கை அமுல் செய்யப்பட்டுள்ளதால் இந்த விவரங்களைத் தமக்கு அளிப்பது அவசியமாகவுள்ளது என்றும் — அவர்கள் இராணுவத் தளபதியிடம் சுட்டிக் காட்டியுள்ளனர். (ஐ-க-3)

உ
சிவமயம்
மங்களகரமான புதுக்கடைத் திறப்புவிழா
நிகழும் பிரமாதி வருடம் ஐப்பசித் திங்கள் 24 ஆம் நாள் (10-11-1999)
இன்று புதன்கிழமை பகல் 10.58 முதல் 12.02 வரையுள்ள சுப வேளையில்
இணுவை கனக தயாபரன் பன்சி பலஸ்
என்னும் கடையை ஆரம்பிக்கவுள்ளோம். தாங்கள் வருகை தந்து கடையைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.
இங்ஙனம்
தங்கள் நல்வரவை விரும்பும்
உரிமையாளர்.
64, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
குறிப்பு: புதிய நிர்வாகத்தின் கீழ் ஆரம்பிக்கவுள்ள [illegible] இருந்த நிர்வாகத்தினருக்கும் எமக்கும் எதுவித தொடர்புமில்லை என்பதை வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம். (70817)

சுண்டுக்குளி, நல்லூர் மாணவர்களின்
வேண்டுகோளுக்கிணங்க!
மீண்டும் பிரத்தியேக வகுப்பு
(76/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.)
[கணக்கீடு]
D. SAM
ஆரம்பம் — 16 - 11 - 99 (செவ்வாய்)
A/L 2000 — கம்பனி (மாலை 5)
A/L 2001 — நிறைவில் பதிவு. (காலை 6. 15)
★ அனுமதிகளை அத்தினமே பெறவும்.
★ மாணவர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டது.
(சி/9759)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10-11-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org